www.padippakam.com

# அறவழி ஜீவன்





# நினைவேந்தல்

## 17.03.2013

### பாரிஸ்

படிப்பகம்

www.padippakam.com

# அறவழி கீதம்

அன்புவழி,இன்பவழி, அமைதிவழி
அகிலமெங்கும் அஹிம்சை வழி
இதுவே எங்கள் அறவழி
இதுவே எங்கள் அறவழி
(அன்புவழி..)

ஜாதி மத பேதமில்லை
நாடு என்ற கோடு இல்லை
கூடு விட்டு வானம் எங்கும்
பறந்திடுவோம்.
இனமில்லை, மதமில்லை
ஆண்,பெண் என்ற பேதமில்லை
அன்பு என்னும் தீபம் அதை ஏற்றிடுவோம்
(அன்புவழி)

பூமி என்னும் தாய்மடியில்
தவழும் குழந்தைகளில்
யார் பெரிது யார் சிறிது யாருமில்லையே
வானகமும் வையகமும்
யாவருக்கும் பெரிது இங்கு
அன்பு என்னும் தீபம் அதை ஏற்றிடுவோம்
(அன்புவழி..)

எங்களுக்கு கோபமில்லை
எதிரிகள் யாருமில்லை
எல்லோரும் எங்கள் உறவினரே
(அன்புவழி..)

# நாற்பது ஆண்டு கால நட்பு!

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

தலை நாள் பார்த்தேன் பேசினேன், பழகத் தொடங்கினேன். அன்று முதல் அண்மைக் காலம் வரை ஒரு மணித்துளியேனும் முரண்பாடற்றுப் பழகும் வாய்ப்பைத் தந்தவர் மட்டுவில் திரு. சீவகதாசர், அவர் துணைவியார் திருமதி. ஈசுவரி.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குத் தொண்டர்கள் தேவை என 1973 கார்த்திகையில் யாழ்ப்பாணம் ஈழநாடு இதழில் விளம்பரம் செய் தேன். விண்ணப்பங்கள் குவிந்தன. 70 வயது இளைஞர் ஈ. பி. இராசையா தொடக்கம் உரும்பராய் இளைஞன் சிவகுமாரன் வரை நூற்றுக்கும் கூடுதலான விண்ணப்பங்கள்.

யாவரையும் சுண்டுக்குழி பெண்கள் கல்லூரிக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைத்தேன். நெடு வரிசையில் காத்திருந்த பலர் தேர்வாயினர். தகைமைக்கேற்பப் பணி ஒதுக்கினேன்.



சிரித்த முகம், பணிவும் பதமையும் கொண்ட உடல் மொழி, தமிழ்த் தட்டச்சுத் தகைமை. ஆண் ஒருவர் பெண் மற்றவர். இருவரும் மட்டுவிலார். இருவரையும் மாநாட்டு அலுவலகத்தில் பணிக்கமர்த் தினேன்.

ஒருவர் சீவகதாசர், மற்றவர் ஈசுவரி. இருவரும் உறவினர் மட்டுமல்ல அன்பால் ஒருவரோடு ஒருவர் கட்டுண்டவர்.

மாநாட்டுச் செயலகத்தில் உள்ளவர் எனக்கு நன்றி

அன்பு, அகிம்சை, எளிமை



படிப்பகம்

சொல்லுமாறு இருவரின் பணி அமைந்தது. பேராசிரியர் வித்தியானந்தன், தவத்திரு தனிநாயக அடிகளார், பேராசிரியர் பத்மநாதன், கட்டடக் கலைஞர் துரைராசா, பொறியிலாளர் கோபாலபிள்ளை மகாதேவா யாவரும் என்னைப் பாராட்டினர். எனக்குப் பாராட்டைப் பெற்றுதருமாறு ஈடுபாட்டுடன் சலசலப்பின்றித் தட்டச்சிடுதல், கோப்பிடுதல், 'ஓமய்யா, ஓமய்யா' என அனைவருக்கும் ஒப்புச்சொன்ன மென்குரலுடன், பணிவு காட்டும் உடல்மொழியுடன் அந்த இணையர் பணிபுரிந்தனர். எறும்புகளையும் யப்பானியரையும் நினைவூட்டிய இணையராய் எதிர்பார்ப்பு எதுவுமின்றித் தம் பணி உண்டு தாமுண்டு என இருந்த அவர்களுக்குத் தொண்டர் சான்றிதழ் வழங்கியதுடன் என் தொடர்பு விட்டது.

தொண்டர் சான்றிதழ் வழங்கியதும் என் பணி முடிவடைந்ததைக் குறிப்பிடுவதன் காரணமுண்டு. 1986இல் சென்னையில் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (ஈபிஆர்எல்எஃப்) தலைவர் பத்மநாபாவைச் சந்தித்தேன். அவர் சொன்னார், பள்ளிப் படிப்பை முடிக்காததால் தேர்வுச் சான்று எதுவும் என்னிடம் இல்லை. பள்ளி விட்டகன்ற சான்றிதழ் என்னிடம் எதுவும் இல்லை. ஐயா, நீங்கள் ஒப்பமிட்டுத் தந்த தமிழாராய்ச்சி மன்றத் தொண்டர் என்ற சான்றிதழ் ஒன்றுதான் என்னிடம் உண்டு. இன்று வரை அதுவே என் தகுதிச் சான்றிதழாகும் என நெஞ்சுருகிச் சொன்னவை நினைவுக்கு வருகின்றன. பத்மநா பாவுக்குச் சான்றிதழ் வழங்கியதோடு அவருடனான என் தொடர்பு குன்றியது.

அதைப் போலவே, நூற்றுக் கணக்கான தொண்டர்களும் சீவகதாசரும் ஈசுவரியும் தொடர்பில் இல்லை எனினும் பின்னர் நான் எழுதிய எனது யாழ்ப்பாணமே என்ற நூலில் சில தொண்டர்களின் பெயரைக் குறிப்பிட்டேன். சீவகதாசரும் ஈசுவரியும் அப்பொழுது என் நினைவுக்கு வந்த தொண்டர்களுள் இருவர். அவர்கள் தொண்டும் பங்களிப்பும் என் மனத்தை மட்டுமல்ல, மாநாட்டை நடத்தியோர் நெஞ்சங்களையும் தொட்டவையாகும்.

1977இல் கொழும்புப் பணியை விட்டு யாழ்ப்பாணம் வந்தேன். தென்மராட்சி அன்பர்கள் வீடுதேடி வந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியில் உறுப்பினனாகச் சேர்த்தனர். தென்மராட்சிக் கிளையின் ஆட்சிக் குழுவிலும் சேர்த்தனர். சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினரும் என் நெடுநாள் அன்பருமான திரு. வி. என். நவரத்தினம் அவர்களின் அலுவலகத்தில் மீண்டும் சீவகதாசரைக் கண்டேன். சீவகதாசராக வந்து தன் உறவைப் புதுப்பித்தார்.

எனினும், எப்படி? எப்படி? எனக் கேட்கும் உறவுதான். 1979 தையில் யாழ்ப்பாணம் ஈழநாடு இதழில் தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு சார்பில் விளம்பரம் கொடுத்தேன். அறவழிப் பயிற்சிக்கு ஆளணி சேர்த்தேன்.

விண்ணப்பித்தவர்களுள் சீவகதாசரும் ஈசுவரியும் அடங்குவர். பேராசிரியர் நேசையா தலைமையில் பயிற்சி வழங்கினேன். தென்மார்க்குப் பெண்மணியும் பயிற்சி வழங்குவதில் உதவினார்.

அந்தப் பயிற்சி முகாமின் இறுதியில் அமைப்பற்ற அமைப்பாக, அறவழிப் போராட்டக் குழு எழுந்தது. பதவிகள் எதுவும் இல்லாத அமைப்பு.

சீவகதாசர் தொடர்பாளர்களுள் ஒருவர். அதற்குமேல் அவருக்குப் பதவி எதுவும் இல்லை. 1980 சித்திரையில் நன்கொடையாக நான் வழங்கிய தொகையும் வீ. சு. துரைரசா பெயரில் வழங்கினேன்.

அறவழிப் போராட்டக் குழு அமைப்பு வடிவம் பெற்றது. 1981 முதலாக சீவகதாசர் அதன் செயலாளர். 2013இல் அவர் இறக்கும்வரை, இடையில் இரு ஆண்டுகள் தவிர, அவரே செயலாளர்.

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவுக்கு அவர் பெயரை விதந்துரைத்தேன் பேராசிரியர் நேசையா சேர்த்துக்கொண்டார். அங்கு சில ஆண்டுகள் துணைச் செயலாளர்.

எனக்குத் தெரிந்த வெளிநாட்டு அன்பர்களை ஒவ்வொருவாராக அறிமுகம் செய்து, அமைப்பாக வளரும் அறவழிப் போராட்டக் குழுவுக்கு கருத்து வளம், ஆளணி வளம், நிதி வளம், நம்பிக்கை ஊட்டம் எனத் தொடர்ந்து பங்களித்தேன்.

சீவகதாசரும் ஈசுவரியும் இந்தப் பங்களிப்பின் தகுதியையும் பெறுமதியையும் தெரிந்தவர்கள். அதனால் என்மீது அளவற்ற மதிப்பு வைத்திருந்தார்கள். என்னைக் கேட்டுச் செய்யவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

எனினும் எண் கண்ணோட்டமும் சீவகதாசர் கண்ணோட்டமும் மிகவும் வேறுபட்டன. அவர் அமைப்புகளில் ஈடுபாடு கொண்டவர் ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புகளை ஒரே நேரத்தில் உருவாக்கும் கண்ணோட்டம் கொண்டவர்.

எனக்கோ அமைப்புகளால் அறவழிப் பணிகளை முன்னெடுக்க முடியாதென்ற கருத்துடையவன்.

சீவகதாசர் தென்மராட்சிக்குள் பணிகளை முடக்குபவர். எனக்கு உலகளாவிய கண்ணோட்டம்இ தொடர்புகள். இந்த வேறுபடுகள் முரண்பாடுகளாக வளரவில்லை என்பதால் அவர் வழியில் அவர் செல்ல அந்த வழியில் எனக்கு உடன்பாடில்லை எனினும் உதவினேன்.

என் பெயரைக் கடிதத் தலைப்பிலோ, செய்தி மடலிலோ, சிறுநூலிலோ எங்காவது சேர்த்துக் கொள்வார்.

அவருக்கு வலிமை தரும் தளமாக என்னைக் கொள்வார்.

40 ஆண்டுகாலப் பழக்கத்தில் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் முரண்பாடு எதுவும் இன்றி எனக்கு என்றுமே துன்பத்தைத் தராதவர் சீவகதாசர்.

ஒரே ஒரு முறை மட்டும் துன்பத்தைத் தந்தார். மீளாத்துன்பத்தைத் தந்தார். சொல்லொணாத் துயரைத் தந்தார்.

ஒருநாள் காலை. 5 மணி. தொலைபேசி அலறுகிறது. மறுமுனையில் உள்ளவர் சொல்கிறார் சீவகதாசர் காலமானார் என. அந்தச் செய்திதான் எனக்கு அவர் தந்த ஒரே ஒரு துன்பம்.

தலைநாட் கொண்ட விருப்பு, அன்பு, பரிவு, பாசம், கேண்மை, நட்பு, உறவு யாவும் அண்மைக் காலம் வரை 38 ஆண்டுகள் தொடர்ந்தன. துன்பம் தராது தொடர்ந்தன.

அவர் நினைவு நெஞ்சைவிட்டகலாது.




# ஜீவன் அறவழியின் அச்சாணி!
# ஜீவன் அறவழியின் ஆணிவேர்!
# ஜீவன் அறவழியின் மூலமந்திரம்!

**1970ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட 43 ஆண்டுகள் சமூகப் பணியில் இணைந்து பயணித்த இரண்டு உள்ளங்களின் குமுறல்கள்.**

நாங்கள் சந்தித்த மனிதர்கள் எத்தனை ஆயிரம், ஆயிரம்.
நாங்கள் செய்து முடித்த சமூகப் பணிகள் எத்தனை ஆயிரம்.
உங்களின் உறவு என்னை உயரச் செய்தது.
உங்களின் ஆற்றல் என்னை வியப்படையச் செய்தது.
உங்களின் உறுதி எனக்கு உரமாய் இருந்தது.
உங்களின் பண்பு எனக்குச் சிறப்பைத் தந்தது.
உங்களின் செயல்கள் என்றும் எனக்கு ஆறுதல் தந்தது.
உங்களின் உழைப்பு அறவழியை உயரச் செய்தது.
உங்களின் வாழ்வு அறவழியின் சொத்தாக மாறியது.
உங்களின் நேர்மை என்றும் என் நினைவில் உள்ளது.
உங்களின் உயிர், பொருள், ஆவி என்றும் அறவழிக்கே.
எங்கள் இருவரின் உணர்வும், அர்ப்பணமும் ஒன்றாய் இருந்தது.
எங்கள் இருவரின் பணியும் என்றும் மாறாமல் இருந்தது.
எங்கள் இருவரின் கருத்தும் என்றும் சேர்ந்தே இருந்தது.
எங்கள் இருவரின் நட்பும் என்றுமே களங்கமில்லாதது.
ஜீவன் என்ற நாமம் என்றும் என் உள்ளத்தை விட்டு அகலாத மந்திரம்.
எமது நல்ல பணிகளுக்கு மீண்டும் மீண்டும் வலுச்சேர்க்க அடுத்த பிறவியில் நிச்சயம் ஒன்றிணைவோம் என்ற நம்பிக்கையுடன்.

**- கனடாவிலிருந்து வி.சு. துரைராசா**

***

# ஜீவா அண்ணர் நடமாடும் நூலகம்

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வடபுலத்தில் சமுதாய மேம்பாட்டு பணிகளில் முழுமையான ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அறவழிப் போராட்டக் குழுவின் ஆணிவேராக இயங்கிக் கொண்டிருந்த அதன் செயலாளர் கந்தையா ஜீவகதாஸ் அவர்கள் காலமான செய்தியினால் பெரும் துயரத்தில் ஆழ்ந்து போனோம். ஒரு சேவையாளனை, பண்பாளனை, புத்திஜீவியை , மானிட நேயரை இழந்த துயரத்தினால் அறவழி சமூகம் மட்டுமல்ல எமது மக்கள் அனைவருக்குமே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.எங்கள் இல்லங்கள் தோறும் மரணவீட்டு சோகம் குடிகொண்டுள்ளது. தனது அன்பினால், அமைதியான நடவடிக்கைகளினால் வழிகாட்டுதலினால் எம்மோடு பிரிக்க முடியாத பிணைப்பை ஏற்படுத்தியிருந்தவர்.
ஜீவா அண்ணா என்றதும் உடனே எம் நினைவுக்கு வருவது நூல்கள், நூலகம், வாசிப்பு, எழுத்து என்பவை தான் என்பதனை குறிப்பிட வேண்டும்.
எம் மத்தியில் நடமாடும் நூலகமாகவும் எம் நெஞ்சங்களில் ஓர் நூலகமாகவும் வாழ்ந்தவர். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்ற வார்த்தையை நிரூபித்தவர் ஜீவா அண்ணர்.
தமது இளமை நாட்களில் அவரது இருப்பிடத்தில் நூலகத்தை உருவாக்கி சிறந்த நூல்களை அழகாக அடுக்கி வைத்திருப்பார். நூல்களுடன் பேசுவது, பழகுவதில் தீவிர ஈடுபாட்டுடன் இருந்தவர். ஆதனால் அறவழிப் போராட்டக்குழுவின் செயற்பாடுகளில் நூலக சேவையினையும் அவர் செயற்படுத்தினார்.
கைதடி நுணாவில் (வைரவர் கோவிலடி) பகுதியில் 1989 இல் அறவழிப் பொது நூலகம் ஒன்றை உருவாக்கி நூலகத்திற்கு பொருத்தமான ஒருவரை நியமித்து வாரத்தில் ஏழு நாட்களும் அந்த நூலகத்தை இயங்கச் செய்தவர். ஏனைய பணிகளுடன் நூலக பணிகளையும் விஸ்தரிக்கும் வகையில் அறவழி நூலக அபிவிருத்திச் சபை ஒன்றினை அமரர் நடேசபிள்ளை ஆசிரியர் தலைமையில் உருவாக்கி மாதாமாதம் இந்தச் சபையினை கூட்டி அதன் செயற்பாடு முன்னேற்றம் பற்றி ஆராய்ந்தார்.
அறவழி பொது நூலகத்தினை உள்ளூர், நகர, மாநகர சபை நூலகங்களுக்கு இணையாக செயற்படுத்தினார். உடனுதவும் பகுதி, இரவல்கொடுக்கும் பிரிவு, மாணவர்களுக்குரிய உசாத்துணை நூல்கள் என வாசகர்களுக்கு தேவையான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என அனைத்தையும் நூலகத்திற்கு வரவழைத்து வாசகர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்கச் செய்தவர். ஜீவா அண்ணர் செயற்படுத்தும் எந்த விடயமாக இருந்தாலும் அவை சிறப்பாக நடைபெறுவதனை நாம் அவதானித்து இருக்கின்றோம். எமது முயற்சிகளுக்கு அவரது ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் பேருதவியாக இருந்தன.
இந்த இக்கட்டான சூழலில் அவரது இழப்பு எமக்கு ஒரு பேரிழப்பாகும்.

**-கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்- கைதடி**

www.padippakam.com

# நிர்வாகிகளுக்கு ஒரு முன்னோடி.............

ஒரு சிறந்த நிர்வாகி எப்படி செயல்படவேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக அல்லது முன்னோடியாக வாழ்ந்தவர் நண்பர் ஜீவகதாஸ்.

1974ம் ஆண்டு 4வது தமிழாராய்சி மாநாடு யாழ்பாணத்தில் இடம் பெற்ற காலத்திலிருந்து நண்பர் ஜீவகதாஸை நன்கே அறிந்தவன் நான். குழப்பத்தில் முடிவடைந்த 11உயிர்களைப்பலி கொண்ட அந்த மாநாட்டின் ஆரம்பம் முதலே மாநாட்டு தொண்டர்களாக பணியாற்றியவர்களில் நாம் இருவரும் அடக்கம். அந்தக் காலம் முதல் அவரது அயராத தளராத உழைப்பையும் செயல்பாட்டையும் பார்த்து வியந்தது மட்டுமல்ல பல தடவைகள் நேரடியாக பாராட்டியும் உள்ளேன்.

அறவழிப் போராட்டக் குழு ஆரம்பிக்கப்பட்ட 1979ம் ஆண்டு முதல் 1981ம் ஆண்டு நான் நாட்டைவிட்டு வெளியேறும் வரை அந்த அமைப்பின் ஒரு முழு நேரப பணியாளனாக ஜீவகதாஸ், துரைராசா. தங்கராசா. தங்கவேல்,நடராசா போன்றவர்களுடன் இணைந்து பணியாற்றியவன் என்கின்ற வகையில் ஜீவகதாசின் சமூக நோக்க சிந்தனையையும் நன்கே தெரிந்து கொண்டவன் நான்.

தேசிய வாத சிந்தனைகள் எழுச்சி பெற ஆரமபித்து அதனூடு இளைஞர்கள் மத்தியில் ஆயுத மோகமும் துளிர் விடத் தொடங்கிய அந்தக் காலகட்டத்தில் தேசிய வாதிகள் மத்தியிலே னய சாத்வீக சிந்தனையாளர்களாக இருந்த மறவன்புலவு.சச்சிதானந்தன் அவர்களின் பெருமுயற்சியால், பேராசிரியர். நேசைய்யா,நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த சி.கதிரவேற்பிள்ளை, வி.என்.நவரத்தினம் ஆகியோரின் பின்பலத்துடன் ஒரு சமூக அமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட அறவழிப் போராட்டக் குழுவினூடாக ஜீவகதாசின் செயல்பாடுகள் மேலும் மெருகூட்டம் பெற்றன.

எமது மண்ணின் கரிய போராட்ட வரலாற்றுக் காலகட்டத்தில் பல்வேறு தரப்பினராலும் குறிப்பாக தனி மேய்ப்பர்களாகியவர்களால் ஏற்படுத்தப்பட்ட பெரும் நெருக்கடிகளுக்கெல்லாம்; முகம் கொடுத்து அறவழிப் போராட்டக் குழு என்கின்ற அமைப்பை சிதைய விடாமல் தனது இறுதிக் காலம் வரை காப்பாற்றிய பெருமை ஜீவகதாசையே சாரும்.

அறவழிப் போராட்டக்குழுவின் ஸ்தாபகர் மறவன்புலவு.சச்சிதானந்தன் அவர்களினூடாக ஏற்படுத்தப்பட்ட பல வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களுடனான தொடர்பை மேலும் வலுப்படுத்தி அந்த அமைப்புகளின் பற்பல சமூக நலத்திட்டங்களை எமது பகுதியின் குறிப்பாக சிறுபான்மைத் தமிழர்கள் என்று சொல்லப்படும் மக்கள் வாழும் பின்தங்கிய பகுதிகளுக்கு எடுத்துச் சென்று அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அன்று முதலே அயராது பாடுபட்டவர் நண்பர்.ஜீவகதாஸ்.

1986ம் ஆண்டு நெதர்லாந்திலுள்ள தொண்டு நிறுவனம் ஒன்றின் அழைப்பை ஏற்று அவர்களது பயிற்சிப் பட்டறை ஒன்றில் கலந்து கொள்ள வந்த ஜீவகதாசை அழைத்துக்கொண்டு ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலுள்ள அவரது தொடர்பாளர்களை சந்திக்க சென்ற வேளைகளில் அவர்கள் ஜீவகதாஸ் மீதும் அவரது சேவை மீதும் வைத்திருந்த நம்பிக்கையையும் பாசத்தையும் நேரடியாகப் பார்த்து வியந்திருக்கிறேன் மகிழ்ந்திருக்கிறேன்.

வெளிநாடுகளில் மட்டுமல்ல உள்ளூரிலும் அப்பப்போ கொடையாளிகளை இனம்கண்டு அவர்களினூடாக பல பணிகளை ஆற்றியவர். குறிப்பாக 2009ம்ஆண்டு ஏற்படுத்தப்பட்ட போரற்ற அமைதிச் சூழலின் பின்னர் வடமாகாணத்தின் அழிவுகளுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்குமான நம்பிக்கை நட்சத்திரமாக செயல்படுகின்ற தோழர்.டக்ளஸ் தேவானந்தாவின் தொடர்பை 2010ம் ஆண்டளவில் எனதும் தோழர்.சுப்பையா மூலமாகவும் பெற்று அவரது பெரும் பங்களிப்பினூடாக வன்னி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட கணவனை இழந்த 162 பெண் குடும்பங்களுக்கான சுயதொழில் வேலைவாய்பு செயல்' திட்டம் ஒன்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி மகிழ்ந்தவர் ஜீவகதாஸ்.

பொதுப்பணி என்று சொல்லிக்கொண்டு சமூகத்தின்; முன் வருபவர்களில் பலர் பேச்சளவில் மட்டும் நின்று கொள்ள, அமைதியாக இருந்து கொண்டு பல பணிகளை ஆற்றியவர் நண்பர்.ஜீவகதாஸ். பேச்சை விட செயலே முக்கியம் என்று செயல்படுபவர்கள் அரிதாகிவரும் இன்றைய சூழலில் ஜீவகதாசின் மறைவு தமிழ் சமூகத்திற்கு குறிப்பாக இன்றைய அனர்த்தப் பாதிப்பை எதிர் கொள்ளும் மக்களுக்கு ஒரு பேரிழப்பேயாகும்.

**கோவை.நந்தன்**

THE WORLD PEACE PRAYER

Lead From death to life
From Falsehood to truth

Lead me From Despair to hope
from fear to trust

Let peace full our heart, our world, our Universe

Peace ........Peace ........Peace .............



ஜீவா அண்ணருக்கு பிடித்த வரிகள்



படிப்பகம்

www.padippakam.com

# அறவழிப் பணி தொடர்வோம்!

இலங்கையின் வரலாற்றில் பலமாற்றங்களுக்கு அத்திவாரமிடப்பட்ட 70 இன் பிற்பகுதிகளில் ஒரு வித்தியாசமான அமைப்பு சாவகச்சேரியில் மறவன்புலவு சச்சிதானந்தத்தினால் தோற்றுவிக்கப்பட்டது. ஆயுதப் போராட்ட இயக்கங்கள் முகை வெடிக்கத் தொடங்கிய காலத்தில் அறவழிப் போராட்டக் குழு என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட அறவழி இயக்கமாக பரிணமித்தது. அதன் செயலாளராக எமக்கு அறிமுகமானவரே திரு.ஜீவகதாஸ் அவர்கள்.. நிர்வாகம் திறமைக்கு உலகளாவிய ரீதியில் வின்சன்ட் சேர்ச்சிலைக் குறிப்பிடுவார்கள். ஆனால் எமக்கு ஜீவா அண்ணன் அவ்வாறு தான் தெரிந்தார். தாமதம் என்பது அவரது செயலில் இருக்காது, நேர்த்தியான தொடர்புகள், தொடர்புக்கான ஆங்கில அறிவு அனைத்தும் ஒருங்கமையப் பெற்றவராக அவர் விளங்கினார். இந்த தொடர்;ச்சியான வேலைகளின் பயனாக அறவழிப் போராட்டக் குழு மிக வேகமாக வளர்ந்தது. அறவழிவகுப்புக்கள், பயிற்சிப் பட்டறைகள் என அறவழித் தொண்டர்களுக்கான வகுப்புக்களுடன் பாலர் பாடசாலைகளும் தொடங்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. வெளிநாட்டு நிறுவனங்களுடனான தொடர்புகள் அவர்களின் வழிகாட்டல்கள் என்பவற்றுடன் அறவழி என்ற பத்திரிகையும் தொடங்கப்பட்டது.

மக்கள் மத்தியிலிருந்த சமூகக் குறைபாடுகளுக்கெதிராக அறவழியின் நடவடிக்கைகள் ஆரம்பிக கப்பட்டன. ஆலயங்களில் உயிர்ப்பலியிடல், கோவில்களில் சமத்துவமின்மை, தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களையும் அறவழி கையிலெடுத்தது. அன்றைய சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வி.என்.நவரத்தினத்தின் பூரண ஒத்துழைப்பும் அறவழிக்கு கிடைத்தது. இவ்வாறு அனைத்துப் பக்க ஆதரவுடனும் அறவழியின் நடவடிக்கைத் தொடர்கின்ற அதேவேளை சாவகச்சேரி தொகுதியில் ஒரு தன்னலமற்ற சேவை செய்யக்கூடிய இளைஞர் பலர் உருவாகியிருந்தனர். அறவழியின் அடித்தளம் சாவகச்சேரியாதலினால் கூடுதலாக சாவகச்சேரி தொகுதி இளைஞர்களே அறவழியில் இருந்தார்கள். ஒப்பீட்டளவில் மற்றைய இடங்களைச் சேர்ந்தவர்கள் சற்று குறைவாகவே காணப்பட்டனர். அறவழியின் தலைவர் வி.எஸ்.துரைராசாவிற்கும் ஜீவகதாசிற்கும் கட்டுப்பட்டு இந்த இளைஞர்கள் இயங்கினார்கள். இவ்வேளையில் 1983 இனக்கலவரம் அறவழிக்கு ஒரு பாய்ச்சலைக் கொடுத்தது. இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு வடபகுதி நோக்கி வரும் மக்களுக்கான முகாமை அறவழி பொறுப்பெடுத்து செயற்படுத்தத் தொடங்கியது. கைதடி ஆயுள்வேத கல்லூரி மண்டபத்தில் முகாம் செயற்பட ஆரம்பித்தது. கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வந்த கப்பல்களில் மக்களின் வரவு ஆரம்பித்தது. வடபகுதியில் வீடுகள் உள்ளவர்கள் உறவினருடன் வசிக்கக்கூடியவர்கள் சென்று விட வடபகுதியில் தொடர்புகளில்லாதவர்கள் முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். மலையகப் பகுதியிலிருந்து பஸ்களிலும் மக்கள் வந்தார்கள். முகாம் அமைக்கப்பட்டபோது அரச உதவி எதையும் எதிர்பாராமல் மக்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. சில நாட்களின் பின்னர் அரச அதிபர் செயலகம் முகாமிற்கான உதவிகளை வழங்கத் தொடங்கியது.அதற்காக அருள்நாயகம் என்பவரை நியமித்தது. அருள்நாயகம் வந்து முகாமையும் நிர்வாகத்தையும் பார்த்த பின் முகாம் நிர்வாகத்தில் தலையீடு செய்யாமல் உதவிகளை மட்டும் வழங்க அரசாங்கம் முடிவெடுத்தது. இந்த தேர்ந்த நிர்வாக கட்டமைப்பு அண்ணன் ஜீவகதாசினுடையது. முகாமையாளராக துரைராஜாவும் ஜீவகதாசும் செயற்பட்ட காலம் மறக்கமுடியாத காலம்.

அப்போதைய யாழ்.அரச அதிபராக தேவநேசன் நேசையா அவர்கள் இருந்தார்கள். அவரது மனைவியே செஞ்சிலுவைச் சங்க வடபிராந்திய இணைப்பாளராக இருந்தார். அவர்களின் உதவியும் முகாமி;ற்கு தொடர்ச்சியாகக் கிடைத்தது. யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்து அருட்சகோதரிகள் சங்கைக்குரிய மரியறோஸ், குறொசீற்றா போன்ற இன்னும் பெயர் நினைவில் இல்லாத பல அருட்சகோதரிகள் முகாமிற்கு தினமும் வந்து தொண்டாற்றியிருக்கின்றார்கள். இவர்களுடன் முகாமில் முக்கியமானவர்களாக கே.வி.முத்துக் குமாரசாமி, வி.எஸ்.துரைராசா, ஜீவகதாஸ், ஆசிரியர் கந்தையா ஆகியோர் மேற்பார்வையாளராக செயற்பட இவர்களுடன் தங்கராஜா, கனகா தங்க ராஜா,..உதயகுமார், ரவீந்திரன், சுபாஸ்கரன். சௌந்தரராஜன், நமசிவாயம், மார்க்கண்டு, நடராஜா, மகாலிங்கம், நித்திய குமார்,திருநாவுக்கரசு, செல்வரத்தினம்,சண்முகநாதன், ஆகியோர் முழு நேரத் தொண்டர்களாகவும் துரைசிங்கம்,ருவேந்திரன், பாஸ்கர், பரமசாமி ஆகியோர் பகுதி நேரத் தொண்டர்களாகவும் செயற்பட்டனர். முகாமிற்கான போக்குவரத்து வசதிக்காக அன்றைய பனம் பொருள் அபிவிருத்தி சபையின் தலைவர் நடராசா அவர்கள் தங்களது வாகனம் ஒன்றையும் வழங்கியிருந்தார். முகாமிற்கு ஆரம்பத்தில் பொலிஸ் பாதுகாப்பு இருந்தது .பின்னர் பொலிஸ் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டு தொண்டர்களே பாதுகாப்புப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர். முகாம் வாசிகளில் பலர் தொண்டர் பணியில் இணைந்து கொண்டனர். காளிதாஸ், வில்வராஜா, மேனன், ஜெயந்திரன், ஆகியோருடன் இன்னும் பலர் சமையற் பகுதியிலும் தொண்டர்களுடன் இணைந்து பணியாற்றினார்கள்.

தொடர்ந்து முகாமிலுள்ளவர்களை மீள்குடியேற்றுவது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது. இரண்டு இடங்களில் காணி வாங்கி வீடு கட்டி கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

அதன் பிரகாரம் மறவன்புலவு, கெற்பலி ஆகிய இடங்களில் காணிகள் பெறப்பட்டது. இதற்கு ஏ.கே.இராமலிங்கம் அவர்களும் ஜீவகதாஸ், துரைராசா போன்றவர்களுடன் இணைந்து செயற்பட்டார். காணியில் வீடு கட்டி அனைவரும் குடியமர்த்தப்பட்டு முகாம் மூடப்பட்டது. அறவழிப் போராட்டக் குழுவின் மிகப் பெரிய பணியாக இந்தப் பணியே குறிப்பிடத்தக்க விதமாக அமைந்திருந்தது. இந்தப் பணி பூரணத்துவமாக முற்றுபெறுவதற்கு உழைத்த அனைவரும் தொடர்ந்து நாட்டில் இருந்திருந்தால் மிகப் பெரிய அளவிலான வேலைகள் செய்யப்பட்டிருக்கும். இந்தப்பணியில் தம்மை



படிப்பகம்

ஈடுபடுத்தியிருந்த தொண்டர்களில் பெரும்பாலானவர்கள் நாட்டை விட்டு வெளியேறி விட அனைத்துப் பணிகளும் ஜீவகதாஸ் என்ற ஒருவரின் மேல் சுமத்தப்பட்டது. நிர்வாகத் திறனுக்குப் பெயர் பெற்ற ஜீவகதாஸ் அந்தப் பணியினை வெற்றிகரமாகச் செயற்படுத்தி வந்த நிலையில் அறவழியில் புதிதாக உள்வாங்கப்பட்ட புதிய உறுப்பினர்களுடன் பல வழிகளிலும் வியாபித்து வளர்ச்சியடைந்தது. வெளிநாட்டு உதவி நிறுவனங்களின் நிதியுதவிகள் கிடைக்கப் பெற்று பெருவளர்ச்சி பெற்ற காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் அறவழிக்குமிடையில் உரசல் ஏற்பட்டது. நிர்வாகத்திலிருந்த மற்றவர்களை தங்கள் பக்கமாக்கிக் கொண்ட விடுதலைப் புலிகள் தங்களது நிர்வாகத்தின் கீழ் அறவழிப் போராட்டக் குழுவை கொண்டு வர முயற்சித்தார்கள். தனிமனிதனாக ஜீவகதாஸ் இந்த முயற்சியை எதிர்த்து நின்றார்.ஜீவகதாசுக்கு எதுவும் நடக்கலாம் என்ற தோற்றப்பாடு உருவானபோது அவராகவே வெளியேறிச் சென்றார்.

விடுதலைப் புலிகள் தாங்கள் நியமித்தவர்களையும் அறவழிப் போராட்டக் குழுவிலிருந்து தங்களுடன் இணைந்து கொண்டவர்களையும் வைத்து அறவழிப் போராட்டக் குழுவினை நடத்த ஆரம்பித்த போது ஒரு நிர்வாகக் குழப்பம் ஏற்பட்டது. வெளிநாட்டு நிதியுதவிகள் நிறுத்தப்பட்டன. இதனால் அறவழிப் போராட்டக் குழு செயற்பாடற்ற நிலைக்கு தள்ளப்பட்டது.

இவ்வாறு அறவழிப் போராட்டக் குழு செயலற்று தூங்கு நிலையிலிருந்தபோது இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இராணுவம் யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டெடுத்தது. இந்தப் புதிய சூழலில் விடுதலைப் புலிகள் அனைத்தையும் விட்டு விட்டு வன்னி நோக்கி நகர்ந்தனர். இதன் பின்னர் ஜீவகதாஸ் தனது அறவழிப் போராட்டக் குழுவின் பணிகளை மீண்டும் கையிலெடுத்து அதன் அலுவலகத்திலிருந்து தனது பணிகளை ஆரம்பிக்கின்றார்.

மீண்டும் அறவழியின் செயற்பாடுகள் வீறும் வேகமும் கொண்டு நடைபோட அறவழி பயிலரங்குகள், தொண்டர்களுக்கான பணிகள் என்பன புதுவேகத்துடன் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அறவழியின் பணிகளுக்காக வாகனங்கள் வந்து சேர்;ந்தன. அறவழியின் பணிகள் விரிவடைந்து செயற்பட ஆரம்பமாகியது. பாராளுமன்ற உறுப்பினரின் அபிவிருத்திப் பணிமனையில் தனது பணியினை ஆரம்பித்த அறவழி போராட்டக் குழு தனக்கென பிரத்தியேக அலுவலகம், வாகனம் ,பயிலரங்கங்கள் என வளர்ச்சி கண்டது.மறவன்புலவு, கெற்பலி குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த் தப்பட்டவரகளுக்கு காணிஉறுதிகள் வழங்கப்பட்டன. இவ்வாறாக வேகத்துடனும் பணி இலக்குடனும் பயணித்த அறவழிப் போராட்டக் குழு இன்று தலைவனை இழந்து நிற்கின்றது.

தலைவனை இழந்து நிற்கும் அறவழிப் போராட்டக் குழுவின் பணிகளை அவரின் பாசறையில் பயின்றவர்கள் அவர் வழிகாட்டலில் வந்தவர்கள் முன்னெடுத்துச் செல்வதே நாம் அவருக்கு செய்யும் பெரும் சேவையாக கருதுகின்றேன்.

**பாரிசிலிருந்து**
**குமாரசாமி உதயகுமார்**

## ஜீவனின் ஜீவன் எங்களில் என்றும்........



ஜீவனின் அன்பான துடிப்பில்
அகில அசைவு இன்றும் தொடர்கிறது
 - ஆம்
அண்ணன் ஜீவாவின்
அஹிம்சையின் எண்ணக்கரு
சமூக நற்சிந்தனை உள்ளங்களை
ஒன்றாக்கி வென்றாக்கியதே
அறவழி என்னும் போரினை
எழுதுகோல் கருவிக்குள் புகுத்தி
தமிழின வயல்களில்
கடுமணி விதைகளாய் விதைத்து
உழுதிட்ட விவசாயி இவன்
செழித்து வளர்ந்து விருட்சமாகி
விளைந்து பயன்தரும் அஹிம்சை பயிர்
ஆற்றலுள்ள ஆற்றுகை மிக்க
செயலாற்றுகின்ற துடிப்புள்ள ஜீவனை
கண்டு வியந்தேன் எண்பதுகளில் அன்று
அறவழி பயிற்சிப்பட்டறை
ஒரு வாரகாலம் கைதடி நவீல்ட் பாடசாலையில்
வெளிநாட்டு , உள்நாட்டு அறிஞர்கள் பெரியவர்களின்
பாசறையை ஒழுங்குபடுத்தி
கட்டுக்கோப்பான கட்டளைகளை பிறப்பித்து
பட்டறையை பட்டைதீட்டி
பளிச்சிடச் செய்த பண்பாளன் ,பல சிந்தனைகளை ஒன்றாக்கி
விட்டுக் கொடுப்பு, கொடுத்து வாங்கல்
சேர்ந்து செயல், தேர்ந்த தெரிவு, தலைமைத்துவம்
வெளிச்சொல்லியல்
எழுத்துருவில் பதிவாக்கல், செயலாற்றல்
என்று பலவற்றில் பயிற்சிப்பட்டறை
புதிய முகாம்களுடன் முதல் முகாம்
என்னை நானே எண்ணிப் பார்க்கும் அனுபவம்
இத்தனையும் கற்றுவிட களம் தந்த
ஜீவா அண்ணனின் ஜீவன்
இன்றும் என் உணர்வில்

அதனால்
சமூகம், இனம் சார்ந்து, கலை சார்ந்து
என்னியக்கம் தொடர்கிறது
கல்வி வாசமே அறியாக் கிராமங்களில்
ஆரம்ப கல்வி அறிவுத் தென்றலை வீசச் செய்த வீச்சாளர்

வன்முறை கலாச்சார சீரழிவுக்குள் சிக்கித் தவித்த எம்மவர்க்கு
அறவழி அறிவு புகுத்தி அஹிம்சை வழி நடத்திய நடப்பாளர்
ஆலய முன்றலில் பலியிடும் மூட நம்பிக்கை மரபை
கருத்தியல் கருவியால் நிறுத்திக் காட்டிய நிதர்சனன்
சாதீய சாயம் பூசி,மேலாதிக்க இழிநிலை காடையர்களின்
கொடுமை தனை கொழுத்தி எரிக்க முனைத்திட்ட முனைப்பாளன்
வெளிநாட்டு உதவி வேண்டி
80 களின் இறுதியில் சுவிஸ் வந்தபோது
ஜீவா அண்ணனை சந்திக்கும் வாய்ப்பு பெற்றேன்
ஈழ தேசத்தில் கல்வி வளம் குன்றிய கிராமங்களில்
கல்வியின் கனதியை பெருக்கிட
என்றும் பணியாற்றுங்கள் என
அன்பான வேண்டுகோள் விட்டமை இன்றும் என்
மனக்கண்முன்னே
சமூக மாற்றம் வேண்டி
இறுதிவரை சளைக்காது, களைக்காது
அறவழி ஊடாக பணியாற்றிய
எங்கள் ஜீவா அண்ணனின் ஜீவன்
நிறுத்தப்பட்டாலும்
ஜீவனின் துடிப்பான அதிர்வு
எங்களின் ஜீவனில் என்றும்..

**வா.வி.பாஸ்கர் - சுவிஸ்**

# ஜீவா அண்ணாவும் அறவழியும் பிரியமுடியாத பிணைப்பு

ஜீவா அண்ணா மறைந்து விட்டார் என்பதை விட எங்கள் எல்லோரினதும் இதயங்களில் நீக்கமற நிறைந்து விட்டார் என்பது தான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.அவர் எம் அருகில் இருந்தபோது அவரது உறவு பற்றி உணர முடியவில்லை. இந்தப் பிரிவு பெரும் துயரை ஏற்படுத்தியிருக்கின்றது. சேவையாளர்களுக்கும் தொண்டர்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இடைவெளியையும் வெற்றிடத்தையும் ஏற்படுத்தியுள்ள இந்த இழப்பை எவராலும் ஈடு செய்யமுடியாது.

இயங்கியல் சக்தியாக நாள்தோறும் செயற்பட்டுக் கொண்டிருந்த ஒரு செயற்பாட்டாளரின் பிரிவின் பின்னர் இனி எப்படி செயற்படப்போகிறோம் என்ற கேள்வி எழுந்துள்ளது. இதற்கு எவராலுமே விடை சொல்ல முடியாது. ஜீவா அண்ணாவின் உயிர்ப்பு மட்டுமே இதற்கான விடையாக என்னால் கண்டுபிடிக்க முடிகிறது.

அவரது வழித்தடத்தினை தொடர்வதும் செயற் திட்டங்களை நேர்த்தியான முறையில் செயற்படுத்துவதால் மட்டுமே அவரை உயிர்ப்பிக்க முடியும் என்று நம்புகிறேன். அவரது புன்னகை பூத்த முகத்தினை, அன்பான வார்த்தைகளை,ஆதரவான செய்கைகளை நினைத்து நினைத்து நாள்தோறும் சோக வலிகளுடன் போராடிக்கொண்டிருக்கி;ன்றேன்.

அவர் வாழ்ந்த காலத்தில் இந்த வலி பற்றித் தெரியவில்லை. எம்மை விட்டு தூரப்பயணித்தபோது தான் வலியின் ரணங்கள் அதிகமாகிக் கொண்டிருப்பதை உணரக்கூடியதாக உள்ளது.

.மட்டுவில் மானாவளை கிராமத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்த ஜீவா அண்ணன் தமது பாடசாலை நாட்களில் கல்வி, கலாச்சார, விளையாட்டு துறைகளிலேயே முதன்மை மாணவனாக திகழ்ந்தவர். இளம்பராயத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தின் சிறந்த கரப்பந்தாட்ட வீரனாக திகழ்ந்தவர்.இடதுசாரி சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட அவர் அன்றைய சமூக விடுதலைப் போராட்டங்களில் பங்கெடு;த்தவர். தமிழ் மொழி மீதும் தமிழினத்தின் மீதும் பற்றுமிக்க அவர் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டார்.

சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வ.ந.நவரத்தினம்;, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அ.அமிர்தலிங்கம் , கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் கதிரவேற்பிள்ளை , தந்தை செல்வா உள்ளிட்ட பல தமிழ் தலைவர்களின் நம்பிக்கைக்கும் நேசத்துக்கும் உரியவராக திகழ்ந்தவர்.

ஜீவா அண்ணாவின் 65 ஆவது அகவையையொட்டி அவரின் பல்துறைப் பணிகளை கௌரவித்து கைதடியில் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் சார்பில் பட்டமளித்து, கௌரவிப்பு நடத்துவது பற்றி ஆலோசிக்கப்;பட்டதுடன், சிறப்பு மலர் ஒன்றினையும் வெளியிடுவதற்கு தீர்மானித்திருந்தோம். இதற்கான உதவிகளை வழங்குவதாக திரு.துரைராஜா அண்ணர் உறுதியளித்திருந்த போதிலும் தவிர்க்கமுடியாத நிலைமையினால் இந்த நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது. உயிருடன் இருக்கும்போதே அவரை பாராட்டி எழுதவேண்டும் என்று எண்ணியிருந்த நான் இன்று அவரது மறைவுக்குப் பின்னர் நினைவுகளைப் பகிரவேண்டிய துர்ப்பாக்கியநிலைக்கு தள்ளப் பட்டுள்ளேன்.

ஜீவா அண்ணா என்றால் அறவழி, அறவழி என்றால் ஜீவா அண்ணா பிரிக்கமுடியாத, அழிக்க முடியாத உறவினை அறவழியோடு ஒன்றிணைந்து பின்னிப்பிணைந்தவர் ஜீவா அண்ணா. ஜீவகதாஸ் என்பது அவரது பெற்றோர் வைத்த பெயர். ஆனால் அறவழி ஜீவா என்பதே எல்லோரும் உச்சரி;;க்கும் நாமம் ஆகிவிட்டது. சாதாரண வேலை நேரம் எட்டு மணித்தியாலம் என்று வரையறுக்கப்பட்டாலும் ஜீவா அண்ணனைப் பொறுத்தவரை 24 மணி நேரமும் அறவழி பணியாகவே இருந்தது. அவரது நுட்பமான திட்டமிடலும் நேர்த்தியான நிர்வாகத்திறனும் அறவழிப் போராட்டக் குழுவின் வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது.

மூடக்கொள்கைகளுக்கு எதிராக முளைவிட்ட அறவழி இயக்கத்தில் செயலாளராக தெரிவு செய்யப்பட்ட ஜீவா அண்ணா அன்று முதல் இன்று வரையும் அயராது, ஓயாது, அர்ப்பணிப்புடன் அறவழியின் வளர்ச்சிக்காக உழைத்தவர்.

.தன்னார்வ தொண்டு நிறுவனமாக இயங்கிக் கொண்டிருந்த அறவழிப்போராட்டக் குழுவினை சாமான்னிய மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்கான அரசசார்பற்ற நிறுவனமாக மாற்றிய பெருமை ஜீவா அண்ணாவையே சாரும்- சர்வதேச,தேசிய மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மத்தியில் அறவழிப்போராட்டக் குழுவிற்கு ஒரு அடையாளத்தையும் முகவரியையும் பெற்றுக்கொடுத்தவரும் அவரே என்றால் மிகையில்லை.

.அறவழி வெளியீட்டகம் மற்றும் புதிய சமுதாய வெளியீட்டகம் போன்றவற்றின் மூலம் தத்துவ கருத்துக்களையும் அறிவார்ந்த கருத்துக்களையும் காலத்துக்குக் காலம் வெளியிட்டு வந்த அவர் தமிழி;ல் அறவழி என்னும் மாதாந்த பத்திரிகையையும் ஆங்கிலத்தில் Nஏஜுயுபு சுநுPழுசுவு என்ற ஆங்கில தகவல் இதழையும் அறவழி செய்தி மடல் (தமிழில்)ஏஜளுஐழுN என்ற ஆங்கில செய்தி மடல் என்ற இரு இதழ்களையும் மாதாமாதம் வெளியிட்டு வந்தவர்.

அறவழி மழலைகள் கல்விப் பூங்கா
புலமைப்பரிசில் திட்டம்
சுயதொழில் கடனுதவித் திட்டம்
விவசாயத் திட்டம்
வீடமைப்புத் திட்டம்
அறவழி பயிலகம்
மாதாந்த இலக்கிய சந்திப்பு
பாலர் ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி

www.padippakam.com

அறவழிப் பொதுநூலகம்
இலக்கிய பயிற்சி கருத்தரங்கு
புலம் பெயர்ந்தவர்கள் பராமரிப்பு
போன்ற பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி ஆயிரக்கணக்கான பயனாளிகளுக்கு உதவிகள் அறவழிப் போராட்டக் குழுவினால் வழங்கப்பட்டது. இத்திட்டங்கள் அனைத்துக்குமான மூலகர்த்தா ஜீவா அண்ணா தான்.

1983 ஜூலைக் கலவரத்தினால் தங்கள் உடமைகளை இழந்து கொழும்பிலிருந்து ஏதிலிகளாக யாழ்ப்பாணம் வந்த தமிழர்களை அரவணைத்து கைதடி சித்த மருத்துவ பீட வளாகத்தில் அகதி முகாம் அமைக்கப்பட்டது. அரசமற்றும் தொண்டர் நிறுவனங்களின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இந்த முகாமின் முழுப் பொறுப்பும் அறவழிப் போராட்டக் குழுவிடமே ஒப்படைக்கப்பட்டது. அறவழிப் போராட்டக் குழுவின் சார்பில் செயலர் ஜீவா அண்ணா உட்பட தொண்டர்கள் அனைவரும் முழுநேர பணியாளர்களாக முகாமில் பணியாற்றினார்கள். இந்த முகாமில் இருந்த மக்களிற்கான இருப்பிடங்களாக மறவன்புலவு, கெற்பலி போன்ற இடங்களில் குடியிருப்பு வசதிகள் அறவழிப் போராட்டக் குழுவினால் ஏற்படுத்தப்பட்டன. இத்திட்டமும் ஜீவா அண்ணாவின் முழுப் பொறுப்பிலேயே மேற்கொள்ளப்பட்டது. போராட்ட வழலில் அடிக்கடி ஏற்பட்ட இடப்பெயர்வுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக குடியிருப்புக்கள், உணவு, உடை மற்றும் வீட்டு உபகரணங்களும் அவ்வப்போது அறவழிப் போராட்டக் குழுவினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அறவழிப் பணிமனையில் கடமையாற்றிய ஊழியர்களின் எதி;ர்கால நன்மை கருதி சமூக பாதுகாப்புத் திட்டம் ஒன்றினை உருவாக்கி வங்கி ஊடாக ஒவ்வொரு மாதமும் சிறிதளவு சேமிப்பினை ஏற்படுத்தியிருந்ததுடன் அவர்களுடைய பிறந்த நாட்களை எளியமுறையில் நடத்தி பணிமனை தொண்டர்களுக்கிடையே நட்புறவையும் புரிந்துணர்வையும் வளர்த்தெடுத்தார்.

ஜீவா அண்ணாவுடனான நினைவுகளைப் பகிரும் போது அவருடன் இயல்பாக இருக்கக்கூடிய எழுத்தாற்றலை புறந்தள்ளிவிடமுடியாது. கடிதம், மற்றும் திட்ட அறிக்கைகள், நாட்குறிப்புக்கள் மட்டுமல்ல செய்தி கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள், பயணக்கட்டுரைகள் என ஏராளமானவற்றை அவர் எழுதி வந்திருக்கின்றார். இவற்றில் சில அச்சேற்றப்பட்டவையாகவும் சில கையெழுத்துப் பிரதிகளாகவும் இருந்தன. தனது இளமைக்காலத்தில் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வ.ந. நவரத்தினம் அவர்களின் செயலாளர்களில் ஒருவராக இருந்தவர். பாராளுமன்ற உறுப்பினரின் இன்னொரு செயலாளராக இருந்தவர் அண்ணன் வி.சு.துரைராசா.இவர்கள் இருவருமே பாராளுமன்ற உறுப்பினரின் இரு கண்களாகவே செயற்பட்டனர். இந்தப் பணி மூலம் நட்பான ஜீவா அண்ணரும் துரைராஜா அண்ணரும் இன்று வரையும் இணைபிரியா நண்பர்களாக இருந்தனர். 70 களில் கிடைத்த இந்த நட்பு அறவழி ஆரம்பிக்கப பட்டபோது மேலும் இறுக்கமாகவும் நெருக்கமாகவும் பிணைக்கப்பட்ட நட்பாக தொடர்ந்தது. அறவழிப் போராட்டக் குழுவின் தலைவராக துரைராஜா அண்ணர் தெரிவு செய்யப்பட்ட போது அதன் செயலாளராக ஜீவா அண்ணர் தெரிவு செய்யப்பட்டதும் பல வருடங்களாக இணைபிரியாத நட்பாக, குடும்ப உறவாக தொடர்ந்ததும் அனைவராலும் கவனிக்கத்தக்கது.

துரைராஜா அண்ணன் ஜீவன் என்று தான் ஜீவா அண்ணரை அழைப்பார். அந்த அழைப்பிலே அன்பும் பாசமும் நட்பும் இழையோடும். உள்ளார்ந்த அன்போடு அவர் ஜீவன் என்று அழைக்கும்போதெல்லாம் ஜீவா அண்ணன் நெகிழ்ந்து போவார்.அந்த அழைப்பிலே கட்டுண்டு போய்விடுவார். ஜீவன் என்றழைப்பதில் அர்த்தம் இருப்பதனை நம்மில் பலர் வியந்ததுண்டு. ஜீவன் என்று அழைத்துக் கொண்டு துரைராஜா அண்ணர் அறவழிப் பணிமனையில் காலடி எடுத்துவைக்கும் போதெல்லாம் ஜீவா அண்ணரும் ஆனந்தமடைவார்.

துரைராஜா அண்ணர் அருகில் இருக்கும் போதெல்லாம் அல்லது அவரை சந்திக்கும்போதெல்லாம் ஜீவன் என்ற வார்த்தை அடிக்கடி உச்சரிக்கப்படும். இதன்போது ஜீவா அண்ணரும் தனது வேலைப்பளுவையும் கவலைகளையும் மறந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பார். இதனை பல தடவைகள் ஜீவா அண்ணர் கூற நான் கேட்டிருக்கின்றேன்.

ஜீவா அண்ணரின் இழப்புச் செய்தி கிடைத்தவுடன் கனடாவிலுள்ள துரைராஜா அண்ணருடன் தொடர்பு கொண்டபொழுது பேசமுடியவில்லை வார்த்தைகள் வரவில்லை. விம்மி விம்மி அழுதார். பிரிவின் துயர் அவரை வாட்டியதை நான் உணர்ந்தேன். எந்த விடயத்திற்குமே கண்ணீர் விட்டு அறியாத துரைராஜா அண்ணர் இந்தப் பிரிவினால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தார். எப்பொழுது கதைத்தாலும் ராசா, அப்பன் என்று அன்பொழுக அழைக்கும் அவரின் சோகத்தில் நானும் பங்கெடுத்து கொண்டேன். 43 வருட நட்பு ராசா - இந்த இழப்பை என்னால் தாங்கமுடியவில்லை. ஜீவன் என்ற வார்த்தைகள் மட்டும் அந்த அழுகையின் ஊடே வந்து சேர்ந்தன. துரைராஜா அண்ணரின் ஜீவன் என்ற வார்த்தைக்கு வலிமை இருப்பதாக உணர்ந்து கொண்டேன்.

.சமூக செயற்பாடுகளுக்கு அப்பால் ஜீவா அண்ணன் ஒரு மூத்த ஊடகவியலாளர் என்பதனையும் இங்கு பதிவு செய்யவேண்டியது எனது கடமையாக கருதுகின்றேன். 1980 களின் முற்பகுதியில் யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையின் தென்மராட்சி நிருபராக இயங்கத் தொடங்கியதிலிருந்து வீரகேசரி, தினக்குரல், வீக்கென்ட் எக்ஸ்பிரஸ், வலம்புரி போன்ற பத்திரிகைகளுக்கும் செய்தியாளராகப் பணியாற்றினார்.

அவரது எழுத்தாற்றலையும் செய்தி தொகுப்புக்களையும் பாராட்டிய வீரகேசரி நிறுவனம் வீரகேசரி யாழ். மாவட்ட அலுவலக செய்தியாளராக நியமித்து பல செய்திகளை பெற்று அவரது பெயருடனேயே பிரசுரித்தது. ஐ.நா.வின் விசேட பிரதிநிதி (சிறுவர்களுக்கான ) ஒலாரா ஒட்டுணு ஒரு தடவை யாழ்ப்பாணம் வந்திருந்தார். சிறுவர் போராளிகள் தொடர்பான தகவல்களை பெறுவதற்காக அவரது பயணம் அமைந்திருந்தது. விடுதலைப் போராட்டம் முனைப்படைந்திருந்த அந்த நாட்களில் அவர் தனது பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்புவதற்காக பலாலி விமான நிலையத்திற்கு சென்றார். அங்கே ஜீவா அண்ணரும் கொழும்பு செல்வதற்காக சென்றிருந்தார். விமானத்தில் ஒலாரா ஒட்டுணுவை அடையாளம் கண்டுகொண்ட ஜீவா அண்ணர் அவருடன் உரையாடி பேட்டி ஒன்றினை



படிப்பகம்

www.padippakam.com

எடுத்தார். அந்தப் பேட்டியை அடுத்த நாளைய வீரகேசரிப் பத்திரிகை முன்னுரிமையளித்து தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது. ஓலாரா ஒட்டுனுவின் யாழ்.வருகை அந்த நாட்களில் முக்கிய செய்தியாகப் பேசப்பட்டது. அதனால் அந்தச் செய்தியினால் ஜீவா அண்ணர் சிறந்த ஊடகவியலாளர் என்பதனை நிரூபித்துக் காட்டினார்.

ஜீவா அண்ணரின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உந்துசக்தியாக விளங்குவது அவரிடம் இயல்பாக இருக்கும் ஆங்கில அறிவாகும். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும் எழுதவும் தெரிந்த ஜீவா அண்ணர் தமிழிலும் சிறந்த புலமைமிக்கவர்.

எழுத்தும் எழுதுகோலும் அவரிடம் உடன் பிறந்தவை போல் ஒட்டிக்கொண்டேயிருக்கும். எப்பொழுதும் அவரது கைகளில் குறிப்பு புத்தகமும் எழுதுகோலும் உடனிருக்கும். தான் வாசிக்கின்ற நூல்களிலிருந்த முக்கிய குறிப்புக்களை அதில் குறித்து வைப்பார். விஞ்ஞானம், தொழிநுட்பம், தத்துவம், பொருளாதாரம், சரித்திரம், அறிவியல் சம்பந்தமான ஆங்கில மற்றும் தமிழ் நூல்கள் அவர் விரும்பிப் படிக்கும் நூல்களாகும். தனது இல்லத்தில் இதற்கென ஒரு நூலகமும் வைத்திருக்கின்றார். அவரது குறிப்பு புத்தகத்தில் அடுத்த நாள் செய்யவேண்டிய பணிகள், மற்றும் வாராந்த, மாதாந்த, வருடாந்த பணிகள் பற்றிய குறிப்புக்களும் இருக்கும். எதனையும் திட்டமிட்டு செய்வதிலும் அவர் வல்லவர். ஜீவா அண்ணர் தயாரிக்கின்ற கடிதங்கள், மற்றும் திட்ட அறிக்கைகள் எவராலும் நிராகரிக்கப்பட முடியாதவையாகவே இருக்கும். நன்கொடையாளர்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள், சர்வதேச மற்றும் தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இவ்வாறான அறிக்கைகள் அனுப்பப்படும். இதுவரையும் இவற்றை எவரும் நிராகரித்ததாக வரலாறு இல்லை. அவரது எழுத்துக களுக்கும் எழுதுகோலுக்கும் பெரிய பலமுண்டு என்பதனை நான் நேரிலே பார்த்திருக்கின்றேன்.

யாழ்ப்பாணம் கோட்டை மீதான விடுதலைப் புலிகளின் முற்றுகையினால் யாழ்ப்பாணம் முற்றாக ஸ்தம்பித நிலை அடைந்திருந்தபோது இந்தச் வழலில் அரச நிறுவனங்களின் வழமையான செயற்பாடுகளும் மந்த நிலையடைந்திருந்தது. இதனால் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணி அத்தியாவசிய தேவையாக உணரப்பட்டது. இந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் றெட்பானா நிறுவன மண்டபத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஒன்று உருவாக்கியிருந்தன. இதில் ஜீவா அண்ணரின் பங்களிப்பு முக்கியமாக இருந்தது. போரூட், சிறுவர் பாதுகாப்பு நிதியம், சர்வோதயம், றெட்பானா, கெயர், செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட பல நிறுவனங்களோடு இணைந்து அறவழிப்போராட்டக் குழுவும் செயற்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை தேவைகளை கவனிப்பதுடன் யாழ்ப்பாணத்தின் அன்றைய நிலையை கொழும்பு உட்பட அனைத்து இடங்களுக்கும் ஒலிக்கின்ற செயலாக யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனம் செயற்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்ற வெளிநாட்டு பிரமுகர்கள் மற்றும் கொழும்பு அதிகாரிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடுகின்ற நிலைக்கு இதன் பணிகள் அமைந்திருந்தன. இந்த காலகட்டத்தில் தான் ஜீவா அண்ணாவின் சமுதாய பணிகளை பாராட்டி சர்வோதயம் விருது வழங்கி கௌரவித்தது. அவரது பணிகளை பாராட்டியும் கௌரவித்தும் பல விருதுகள் கிடைத்தாலும் சர்வோதய விருது மட்டும் எல்லோராலும் பேசப்பட்ட விருதாகும். மொறட்டுவ சர்வோதய தலைமைச் செயலகத்தில் வைத்து அதன் தலைவர் ஏ.ரி.ஆரியரத்னவினால் இந்த விருது வழங்கப்பட்டது.

இத்தகைய செயற்திட்டங்களுக்கு மத்தியில் 90 களின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளி;ன் கட்டுப்பாட்டிலிருந்த காலத்தில் அவர்களுக்கு கட்டுப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அறவழிப்பணிகளில் விடுதலைப் புலிகள் தலையீடு செய்வதை ஜீவா அண்ணர் ஒரு போதும் விரும்பவில்லை. அறவழிப் போராட்டக் குழுவை விடுதலைப் புலிகள் பொறுப்பேற்றதால் ஜீவா அண்ணரின் பணிகள் முடக்கப்பட்டன. இந்தக் கால கட்டத்தில் அவர் மனமுடைந்து காணப்பட்டார். தான் கட்டிக்காத்து வளர்த்து உருவாக்கிய பணிமனையில் இன்னொரு நிர்வாகம் நடப்பதை அவரால் சகித்துக் கொள்ள முடியாதிருந்தது. ஜீவா அண்ணன் அறவழியில் இல்லாத நாட்களில் பணிகளில் மந்த நிலை காணப்பட்டது. ஊழியர்கள் மற்றும் பயனாளிகள் மத்தியிலும் விரக்தி நிலை ஏற்பட்டது. 1995 இல் இடம் பெற்ற யாழ்.மக்களின் பாரிய இடப்பெயர்வினைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் வன்னிக்குச் சென்றதன் பின் மீண்டும் அறவழிப் போராட்டக் குழுவின் பணிகளை ஏற்றுக்கொண்டு ஜீவா அண்ணர் இன்று வரையும் மிகச் சிறப்பான முறையில் பணிகளை நடத்தினார். உடல்நலக்குறைவு மற்றும் வேலைப்பழுவினால் சோர்வுநிலை ஏற்பட்ட போதும் எதையும் பொருட்படுத்தாது தன்னை அர்ப்பணித்து தியாக சிந்தனையுடன் செயற்பட்டார்.

.அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், அரிமாக்கழகம் , வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், தந்தை செல்வா அறங்காவல்குழு எனப் பல பொது அமைப்புக்களில் உறுப்பினராக இருந்தார். அவரது ஆற்றல்களினால் கவரப்பட்ட வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் அவரை தமது சங்கத்தின் செயலாளராக்கி அழகு பார்த்தது. ஈழநாடு, உதயன், வலம்புரி, ஈழநாதம், வீரகேசரி, தினகரன், சுடரொளி மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளின் பத்திரிகையாளர் பலருடன் நீடித்த நட்பினை பத்திரிகை பணி மூலம் வளர்த்துக் கொண்டார்.

.பத்திரிகையாளர் சங்க செயலாளர் பதவியிலிருந்த காலத்தில் இயன்றவரையும் சங்கத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தார்.

.அந்த உழைப்பும் ஓயாத நடவடிக்கையும் தான் அவரை நிரந்தர நோயாளியாக்கியது. இதனால் தனது 67 வது வயதில் ஆயிரக்கணக்கான பயனாளிகள் மற்றும் குடும்பத்தினர் ஊரும் உறவுகளும் கலங்கியழ இவ்வுலகை விட்டு பிரிந்துவிட்டார்.

இன்னும் சில காலமாவது அவர் வாழ்ந்திருக்கவேண்டும் என்று நாங்கள் ஆசைப்பட்டாலும் அவருக்கு எழுதப்பட்ட விதி அவ்வளவு தான். அவரது உடல் தான் எம்மை விட்டுப் பிரிந்துள்ளதே தவிர அவரது நினைவுகள் தினமும் எம்முடன் வாழ்ந்து கொண்டேயிருக்கும்.

ஜீவா அண்ணாவே நீங்கள் நிம்மதியாக சென்று வாருங்கள். இனியாவது ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.

**என்.கே.துரைசிங்கம்**



படிப்பகம்

# அறவழி நின்ற மறவன் ஜீவகதாஸ்

எனக்கு இன்றும் நினைவிருக்கின்றது. நான் சிறுவனாக இருந்த போது அயல் வீட்டு நண்பர்களுடன் கள்ளன் பொலிஸ் என ஓடி ஒளித்து விளையாடுவது வழக்கம் . ஒரு நாள் நாங்கள் உண்மையிலேயே அயலில் உள்ள போலிசுக்காரர் வீட்டில் ஒளித்து விளையாடினோம். அவ்வீட்டுக்காரர் சேவையின் நிமித்தம் தென்னிலங்கையில் வசித்து வந்தார்கள். நான்ஒளித்திருந்த அறை சற்று வித்தியாசமாக இருந்தது .

பங்குனி வெயிலிலும் ஜில் என்ற காற்று அந்த அறை முழுவதும் வீசி குளிர்மை தந்து கொண்டிருந்தது. மனதை மயக்கும் வாசனை கம கம என அறை முழுவதும் வியாபித்திருந்தது.அடுக்கடுக்காக பல புத்தகங்கள் மிக நேர்த்தியாக வரிசைப்படுத்தப்பட்டிருந்தன . ஆங்கிலம் தமிழ் என பல வெளி நாட்டு நூல்கள் என் கண்களுக்கு விருந்துபடைத்துக்கொண்டிருந்தன. ஓர் மூலையில் சாய்மனைக்கதிரை தனியாக இளைப்பாறிக் கொண்டிருந்தது . வாசிப்பதற்கும் யோசிப்பதற்கும் தூண்டுதலாக அந்த அறை ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இந்த அறையில் தான் அண்ணர் ஜீவகதாஸ் அவர்கள் தங்கி அந்த வீட்டைப் பாதுகாத்துவருகின்றார்.

ஆம் ஜீவகதாஸ் அவர்களின் மாமா வடிவேலு (police) அவர்களின் வீடு தான் அது . அந்த சிறு வயதில் அவர்கள் யார் , இவர்கள் யார் என தரம் பிரித்து நோக்கும் அறிவு எனக்கிருக்கவில்லை. ஆனால் அன்று கண்டு கொண்ட அந்த அறையின் காட்சி என்னைத்தீவிர வாசிப்புக்கும் யோசிப்புக்கும் தூண்டியது என்பது மறுப்பதற்கு இல்லை. என் வீட்டிலும் ஒரு நூலகம் அமைத்து பராமரித்து வரும் பழக்கம் இன்றும் என்னிடம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

1991ம் ஆண்டில் நான் யாழ் மாவட்டத்தில் இருந்து இடமாற்றமாகி மலையகப்பகுதிக்கு ஆசிரியப்பதவியை பொறுப்பேற்றுக்கொள்வதற்காக ஹட்டன் நகரப்பாடசாலை ஒன்றுக்கு செல்கின்றேன். அக்கல்லூரியின் அதிபராக இருந்த திரு. சி .கனகமூர்த்தி அவர்கள் நான் சாவகச்சேரி பகுதியை சேர்ந்தவன் என்பதை அறிந்து கொண்டு ஜீவகதாஸ் அவர்கள் எப்படி இருக்கின்றார் என்கிறார். நான் சற்று திகைப்படைந்தவனாய் அவரை எப்படி உங்களுக்கு தெரியும் என்கிறேன் . 1983 ம் ஆண்டு இனக்கலவரங்களைத்தொடர்ந்து தாங்கள் யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்து வந்ததாகவும் ஜீவகதாஸ் அவர்கள் அறவழிப்போராட்டக்குழு மூலமாக தங்களைத்தங்கவைத்து உணவு கொடுத்து பராமரித்தார் என மிகுந்த நன்றி உணர்வோடு நினைவுகளைப்பகிர்ந்து கொண்டார். என் வீட்டுக்கு அருகாமையில் இருந்த ஒருவரை பலநூறு மைல்களுக்கப்பால் உள்ள ஒருவர் இப்படிக்கூறிய போது என்னில் ஏற்பட்ட அந்த ஆனந்த பிரமிப்பை சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை .

ஜீவகதாஸ் என்ற ஒரு தனி மனிதனிடம் பல்வேறு ஆளுமைகள், திறமைகள் இயல்பாகவே குடிகொண்டிருந்தன. அவருக்கான ஆங்கிலப்புலமை தேசிய,சர்வதேச ரீ தியிலும் பல தொடர்புகளை ஏற்ப்படுத்திக்கொள்ள வழி வகுத்தது . அவ்வாறான தொடர்புகளை புலத்தில் உள்ள நலிவடைந்த சமூக மேம்பாட்டிற்கு அர்ப்பணித்து செயற்பட்டதன் மூலமாக போற்றுதற்குரிய மனிதராக அவர் நோக்கப்படுகிறார். குழந்தைகளுக்கான கல்வி , பெண்கள் ,முதியோர்களுக்கான நலத்திட்டங்கள் ,அறவழி நூலக சேவ்வ போன்றன பாராட்டப்பட வேண்டிய சேவைகள் ஆகும் .

தென்மராட்சியில் யுத்தகாலப்பகுதியில் பாரிய அழிவுகள் ஏற்பட்ட வேளை மட்டுவில் பகுதியை புனருத்தாரணம் செய்யும் நோக்கில் " மட்டுவில் அபிவிருத்தி புனருத்தாரண சபை " என ஒரு அமைப்பை உருவாக்கி செயற்படுத்தினார். சில அரசியல் சூழ்நிலைகள் காரணமாக அச்சங்கம் தொடர்ந்து செயற்ப்பட முடியாமல் போனது துரதிஷ்டமானதாகும். அதே காலப்பகுதியில் முற்றாக அழிவடைந்திருந்த மோகனதாஸ் சன சமூக நிலையத்தை இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதிவியாக 1900000 /= பெற்றுக்கொள்ள ஜீவகதாஸ் அவர்கள் காரணமாக இருந்துள்ளார் என்பதனை மட்டுவில் மக்கள் என்றும் நன்றியுடன் நினைவு கூர்ந்து கொள்வர் .

மரணம் என்பது சிறு நிகழ்வு தான், ஆனால் ஒருவன் மரணத்தின் பின்பும் மக்களால் பேசப்படுகின்றான் என்றால் அது வரலாறு . வரலாறு ஒருவரை இறந்த பின்பும் வாழவைக்கிறது . விளையாட்டு வீரனாக, ஆசிரியராக, பத்திரிகை நிருபராக, மொழி பெயர்ப்பாளராக, சமூக நலப்பணியாளராக பல் துறையிலும் தடம் பதித்த அமரர் ஜீவகதாஸ் அவர்கள் என்றென்றும் எம் மக்களின் இதயங்களில் வாழ்வார் . வரலாறாய் தொடர்ந்தும் வாசிக்கப்படுவார்.

**மட்டுவில் .க .அருந்தவராஜா**
**சுவிட்சர்லாந்து**



# அறவழி ஜீவனே என்றும் எம்முடன் நீ...

அறவழிக்குஅணி சேர்த்தாய்
அனைவரையும் அரவணைத்து நின்றாய்
அன்பாலே எமை வென்றாய்
சேவைகள் செய்வாய் நன்றாய்
சேர்த்து வைத்தாய் எமை ஒன்றாய்
பாதியிலே நீ மட்டும் ஏன் சென்றாய்
அறவழியில் வளர்ந்த பிள்ளை
அதனால் உன்வாழும் வெள்ளை
அகதியாய் வந்தவர்க்கு
ஆதரவுக் கரம் நீட்டி
அன்புடனே ஆதரித்தாய்
ஊருக்கும் உறவுகளுக்கும்
துணையாக நிற்கும் உனக்கு
இணையில்லை

வன்செயலோ, வன்சொல்லோ அறியாய் ஐயா
துன்பப்படுபவரின் துயர் துடைத்தாய் ஐயா
தென்னிலங்கை கலவரத்தில் நிர்க்கதியானோர்க்கு
கைதடியில் நிழல் கொடுத்தாய் ஐயா:
மறவன்புலோ, கெற்பெலியில் அவர்களுக்கு
குடியிருப்பு மனை வழங்கி உறுதியும் கொடுத்தாய்
ஆலமரமாய் நீயிருந்து கிராமங்களில்
விழுதுகளை ஊன்றிவிட்டு
பழுதில்லா பணிகள் செய்தாய் ஐயா!
எழுத்தும் எழுதுகோலும்
உன் விரல்களுடன் சங்கமித்து நின்றன
பத்திரிகையிலும் பணி செய்தாய்

வித்தகன் என்று வியப்புடன் உனைபோற்ற
நித்தமும் நீ செய்த பணிகள்
எத்தனை, எத்தனை கணக்கிடமுடியாது
அத்தனை பணியிலும் அகிலத்தை உயரவைத்தாய்
சித்தம் கலங்குதையா
சிந்திக்கும் நேரமெல்லாம்
சிரசெல்லாம் சிதறுதய்யா
இத்தனை பணி செய்த பண்பாளனை
இனி என்று காண்போம் என்று
இதயமெல்லாம் ஏங்குதே ஐயா!

பழி சொல்லும் உலகில்
வழிகாட்ட வந்தவனே
அன்புவழி,இன்பவழி, அமைதிவழி
அகிலமெங்கும் அறவழி
அதுவே என்றும் எமது வழி என்று
இதுவே உந்தன் லட்சியம் என்றாய்
நின் பிரிவு செய்தி கேட்டு
.மெய்யெல்லாம் வலிக்குதே
உன்னோடு பழகிய நாட்கள்
பொய்யாகி போய் விடுமோ?
பொதுமக்கள் அனைவரையும்
உய்விக்க வந்தவன் நீ
உன் உடல் மட்டும் தான் பிரிந்தது
உயிர் எம்முடன் என்றும் வாழும்
நம்புகின்றோம் ஐயா
நேற்றுக் கூட கனவில் வந்து காட்சி தந்தாய்
இன்றும் வருவாய்
நாளையும் வருவாய் .... ஏன்
என்றும் எம்முடன் நீயிருப்பாய் ஐயா!

-பாரிஸ் நண்பன்

****************************************************

# அறவழியில் ஜீவா அண்ணை

-நான் கண்ட திறமை வாய்ந்த நிர்வாகி ஜீவா அண்ணை
-எனக்கு பல நிர்வாக திறமைகளைக்கற்பித்த ஆசான் ஜீவா அண்ணை
-நிர்வாகத் திறன்கொண்டு வழிநடத்தும் செயற்பாட்டினை இரவு பகலாக சிந்திப்பவரே ஜீவா அண்ணை
1983 யூலை கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் வடமாகாணம் தேடி வரலாயினர். இந்த நேரத்தில் அறவழி போராட்டக் குழு இவர்களை கைதடி ஆயுள் வேத மருத்துவ வளாகத்தில் பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நேரத்தில் ஜீவா அண்ணனுடன் நெருங்கிப் பழகினேன். அறவழியில் முழு நேர தொண்டனாக என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். ஜீவா அண்ணாவினாலும் துரைராஜா அண்ணாவினாலும் எனக்கு தரப்பட்ட பணி சுகாதாரப் பணியாக அமைந்திருந்தது.
ஜீவா அண்ணாவின் வழிகாட்டலில் தரப்பட்ட பணிக்காக சிறப்பான முறையில் தொண்டாற்றினேன்.
இதன் பின் மக்களை குடியேற்ற இரண்டு கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டது. மறவன்புலவு, கெற்பலி என்னும் கிராமங்களே அவையாகும். இதில் மறவன்புலவு கிராமத்தின் வீட்டுத் திட்டத்தில் ஜீவா அண்ணர், துரைராஜா அண்ணர் ஆகியோரினால் எனக்கு தரப்பட்ட களஞ்சியப் பொறுப்பாளர் பதவியில் எனக்கு உதவியாக ரவியும் நண்பர்களான செளந்தரராஜன், நமசிவாயம் ஆகியோரும் நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டனர். இதில் நாற்பது குடும்ப வீட்டுத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி பின் நான் புகலிடம் தேடி பிரான்ஸ் நாட்டிற்கு புலம்பெயர்ந்தேன்.
இந்த நேரத்தில் அறவழியின் ஆரம்ப கால உறுப்பினர் அண்ணன் கோவை நந்தனை எனக்கு அறிமுகப படுத்தியவர் ஜீவா அண்ணா தான்.
இதன் பின் நான் ஜீவா அண்ணனை 1986 ஆம் ஆண்டு ஒல்லாந்து நாட்டில் சந்தித்தேன். இந்த தருணத்தில் ஜீவா அண்ணாவின் வெளிநாட்டுத் தொடர்புகள் அறவழி போராட்டக் குழுவின் வளர்ச்சிக்கு உதவிக்கரமாக அமைந்திருந்ததை அவதானித்தேன்.
ஜீவா அண்ணன் இன்று எம்மிடையே இல்லை என்றாலும் அவர் எமக்கு பயிற்றுவித்த நெறிமுறைகள், வழிகாட்டல்கள் இன்றும் என் மனதில் பசுமையான நினைவுகளாய் நிலைத்துள்ளது.
அவரது வழிகாட்டல்கள் அவரது பாசறையில் பயின்று கொண்ட எனக்கும் என் போன்ற பலருக்கும் பக்கபலமாய் அமைந்திருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

**பாரிசிலிருந்து சுபாஸ்**

# பிரிவுத்துயரில் நினைவுப்பகிர்வுகள்...

நல்ல நண்பர்கள் என்றும் பிரிவதில்லை காரணம் அவர்கள் உறவுகள் அல்ல உணர்வுகள்" என்ற வகையில் எனது நல்ல நண்பராகவும் அறவழிக்கு ஒரு வழிகாட்டியாகவும், சமூகசேவைக்கு ஊன்றுகோ லாகவும் இருந்த நண்பர் அமரர். ஜீவகதாஸ் அவர்களின் சாவானது தமிழுலகத்திற்கு ஓர் இழப்பு என்றே சொல்ல வேண்டும்.

எனக்கு நினைவு தெரிந்த வகையில் தமிழினம் பட்ட இன்னல்களும், ஒடுக்கு முறைகளும், பேதங்களும் சொல்லாலும், வார்த்தைகளாலும் அடக்கிவிட முடியாதவை. அதற்கான எதிர்ப்பினை தமிழர் தரப்பில் அகிம்சையாகவும், அறவழிப்போராட்டமாகவும் ஆரம்பிக்கப்பட்டன. அறவழிக்கும், அகிம்சைக்கும் மதிப்பிழந்து உயிர் பறிப்பு ஏற்பட்ட போது தம் உயிர் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக கைகளில் ஆயுதம் ஏந்தவேண்டியதொரு சூழ்நிலைக்கு தமிழர் நாம் தள்ளப்பட்டிருந்த போதும் அறவழியில் நம்பிக்கை கொண்டு அந்த வழியில் இறுதிவரை உழைத்தவர் நண்பர் ஜீவகதாஸ்.

1971களில் எனது தந்தையாருடன் அவருக்கிருந்த நட்பும் தமிழரசுக்கட்சியின் அரசியல் செயற்பாடுகளின் ஈடுபாடும் அதன் பின்னர் அரசசார்பற்றதொரு அமைப்பான அறவழிப் போராட்டக்குழு என்ற அமைப்பின் செயற்பாடுகளில் நானும் ஈர்க்கப்பட்டு 1979 ல் இருந்து 1981 வரை அறவழிப் போராட்டக்குழுவில் ஓர் உறுப்பினராகி மக்களுக்காக பணியாற்றும் அரிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்திருந்தது. இவ்வேளையில் நண்பர் ஜீவகதாஸ் அவர்களின் செயற்திறனும், இரவுபகல் பாராத அர்பணிப்புமிக்க நேர்த்தியான செயற்பாடுகளும் அவர் மீது எனக்கொரு தனிமரியாதையையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருந்தது. அறவழிப்போராட்டக்குழு தனது செயற்பாடுகளை சர்வதேச அமைப்புகளுடன் சேர்ந்து செயற் பட்டபோதும் தாய்மண்ணில் தமிழர் தாயகப்பகு திகளான வடக்கு கிழக்கு பகுதிகளிலேயே செயற்ப ட்டிருந்தது. சாதி சமய பெண்ணடிமைத்தனமற்ற சமதர்ம அடிப்படையிலும், கஸ்ரப்படுகின்ற மக்களுக்கு உதவிடுதல், சீர்திருத்த திருமணம், மாற்றுத்திற னாளிக ளுக்கான உதவிகள் என பல்வேறு செயற்பாடுகள் இவ் அமைப்பால் அக்காலப்பகுதியில் செயற்படுத் தப்பட்டன. சீர்திருத்த திருமணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பேச்சாளர் திரு. வண்ணைஆனந்தன் அவர்களின் திருமணத்தைக் குறிப்பிட்டுக் கூறலாம். மக்களுக்கு உதவும் பணியில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மயிலந்தனை, புணானை, களவாஞ்சின்குடி, மட்டக்களப்பு, மூதூர் திருகோணமலை, பொத்துவில், அன்புவழிபுரம் போன்ற ஊர்களில் முகாம்களிட்டு அவருடன் நானும் பணியாற்றியிருந்தேன். எம்முடன் வெளிநாட்டவர்கள் பலர் சுழற்சி முறையில் கலந்து கொண்டு உதவியி ருந்தனர். இவற்றை ஒழுங்குபடுத்தி எந்தவித எதிர்பார்ப்புமின்றி உழைத்தவர் நண்பர் ஜீவகதாஸ்' அவர்கள்.காலமாற்றம் நாட்டின் சூழ்நிலை மக்கள் போராட்டம் சிங்கள காவல்துறை இராணுவத்தின் கெடுபிடிகள், தலைமறைவு வாழ்க்கை எனப்பல்வேறு காரணங்களால் எனது பாதையின் பயணம் மாற்றம் பெற்றிருந்தாலும், இன்று வரையான எனது அரசியல் சமூகப்பணிக்கு வழிகாலாகவும், சாட்சியாகவும் இருந்தவர்களில் நண்பர் ஜீவகதாஸ் அவர்களும் ஒருவர் என்பதை சொல்லிக்கொள்வதில் பெருமையும், பேருவகையும், அடையும் அதேவேளை அவரின் சாவு என்பது என்னை மனத்துன்பத்திற்கு இட்டுச்சென்றுள்ள போதும் அவரின் மண்பற்றும், மக்கள் நேசமும் அவர் உருவாக்கியவர்களாலும் தொடர்ந்து முன்னெ டுக்கப்படும் என்ற நம்பிக்கையோடு அவர்களுக்கு என்றும் உறுதுணையாக நாம் இருப்போம் என்பதுடன் இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தின் துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்கின்றோம்.

**– து. மேத்தா– பிரான்சு**

## நடமாடும் களஞ்சியம்

ஜீவா அண்ணரின் நிர்வாகத்தின் கீழ் இருந்த அறவழிப்போராட்டக் குழு கைதடி ஆயுள்வேத கல்லூரியில் நடத்தி வந்த முகாமில் தங்கியிருந்த மக்களுக்கு உள்ளூர் மக்களாலேயே நெல், அரிசி போன்ற உபஉணவுப் பொருட்கள் இலவசமாக கையளிக்கப்பட்டு வந்தன. இந்த பொருட்களை மில்லில் கொடுத்து அரிசியாகவும் மாவாகவும் தயாரித்து முகாமிலுள்ள மக்களுக்கு உணவுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்த விவகாரத்தை அறிந்து கொண்ட விடுதலைப் புலிகள் முகமாமில் மக்கள் இலவசமாக கையளித்த பொருட்களுக்கு என்ன நடக்கின்றது என்பது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்று வடபிராந்திய வங்கி முகாமையாளரான ஜே.வி.முத்துக் குமாரசாமியின் இல்லத்திற்கு சென்று அழைத்துக் கொண்டு கந்தையா மாஸ்டரை அவரது பாடசாலைக்கு சென்று அழைத்துக் கொண்டு முகாமிற்கு வந்து சேர்ந்தனர். அப்போது முகாமின் களஞ்சியப்பகுதிக்கு பொறுப்பாக இருந்த நித்தியகுமார், நடராஜா, மகாலிங்கம் என்பவர்களையும் அழைத்து களஞ்சியப் பகுதிக்கான வரவு செலவுத்திட்ட கையிருப்பு ஆவணங்கள் உள்ளிட்ட ஆவணங்களை கொண்டு வரும்படி விடுதலைப் புலிகள் பணித்தனர். ஜீவா அணணாவினால் நெறிப்படு த்தப்பட்டு தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத் தையும் அவர்கள் பார்வைக்கு கொடுத்தபோது அனைத்து விடயங்களும் அப்பழுக்கன்றி அங்கு பதிவிடப்பட்டமையை அறிந்து கொண்டனர். ஜீவா அண்ணாவின் நிர்வாகத் திறன் கொண்ட செயற்பாடுகளை இந்தத் தருணத்தில் நான் சுட்டிக் காட்டவேண்டிய கடமைப்பாடு உள்ளதனாலேயே இந்தச் சம்பவத்தை இங்கு குறிப்பிட்டுள்ளேன். ஜீவா அண்ணரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அத்தனை நிறுவனங்களின் திட்ட வரைபுகள் அனைத்தும் அவருக்கு அத்துபடி. இவை அனைத்தின் நிதிநிலை அறிக்கைகளோ கையிருப்பு அறிக்கை களோ யாரும் உடனே புரிந்து கொள்ளக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டு அந்தந்த அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். இத்தகைய நிர்வாகத்திறனும் வழிநடத்தலும் கொண்ட ஜீவா அண்ணரை நாம் இன்று இழந்து விட்டமை நமக்கான பேரிழப்புக்களில் ஒன்று அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்.

**பாரிசிலிருந்து - நித்தியகுமார்**

# விழிம்பு நிலை மக்களோடு ஜீவா!

தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை பல சமூக ஆர்வலர்களை சந்தித்திருக்கிறது. இவர்களில் பலர் பகுதி நேர சமூக சேவையாளர்களாகவும், சம்பளத்துக்காக பணிபுரிபவராகவும், சமூகசேவையின் ஊடாக தமது சொந்தவாழ்வை மேம்படுத்தும் நோக்கத்தோடும், வெறும் புகழ்ச்சிக்காகவும், சுயவிளம்பரத்திற்காகவும் செயற்படுகின்ற பலரை நம் வாழ்நாளிலும் வரலாற்றிலும் கண்டிருக்கிறோம்.

நடந்துமுடிந்த யுத்தம் சமூகத்திற்காக அர்ப்பணித்த பலரை பலியெடுத்துள்ளது, பலரை பல்லாயிரம் மையில்களுக்கு அப்பால் தூக்கி வீசியும் உள்ளது. இவர்களுக்கு மத்தியில் மக்களின் நலனுக்காகவே பாரிய யுத்தக்கொடுமைகளுக்குள்ளும் மனம்தளராது அனைத்துத் துன்பங்களையும் சுமந்துகொண்டு மக்களுக்காக வாழ்ந்தவர்கள் எம்மண்ணில் சிலரே. இந்தச் சிலரில் ஜீவகதாஸ் எனப்படும் ஜீவாவும் ஒருவராகத் திகழ்வது நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய விடயமாகவே கருதுகிறேன்.

1979 காலங்களில் உருவாக்கப்பட்ட அறவழிப் போராட்டக் குழு பொருளாதார ரீதியாக நலிந்த நிலையில் உள்ள மக்களின் நலன்சார்ந்தே உருவாக்கப்பட்டது. சாவகச்சேரி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களை மையப்படுத்தியே அதிகமான இளைஞர்கள் இவ்வியக்கத்தில் இணைந்து செயற்பட்டனர். குறிப்பாக இவ்வியக்கம் மிக விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய மக்களுக்கான சேவையில் தன்னை முதன்மைப்படுத்தியமையால் அதிகமான தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு பல முன்னுதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. அதிலும் இவ்வியக்கத்தின் செயலாளராக தலித் சமூகத்தை சேர்ந்த ஜீவகதாஸ் செயற்பட்டமையால் பல தலித்துக்களுக்கு உரிமையுடன் இவரிடம் உதவிகோரும் வாய்ப்பு கிட்டியது.

நான் முதன்முதலில் 1980 காலங்களில் இலங்கை மன்ற கல்லூரியினால் சமூகம் சார்ந்து ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்குகளில் அண்ணன் ஜீவா அவர்களை சந்தித்து உரையாடியுள்ளேன். அதன் பின்னர் 2009 ஆம் ஆண்டு நான் இலங்கை சென்றபோது கைதடி நுணாவிலிலுள்ள அறவழிபோராட்ட அலுவலகமும் சென்றுவந்தேன். யுத்தகாலத்தில் சீராக இயங்கமுடியாத இவ்வியக்கம் 2009 இற்குப்பின்தான் தன்னை மீண்டும் புனருத்தாரணம் செய்துகொண்டிருந்தது. பின்னர் 2010 ஆம் ஆண்டும் நான் இலங்கை சென்றபோது, ஒரு முக்கிய நிகழ்வுக்காக அறவழிப்போராட்ட குழுவினரால் அழைக்கப்பட்டேன்.

நடந்த யுத்தம் உயிர், உடமை அழிவுகளை மட்டும் ஏற்படுத்தவில்லை. ஒருவேளை சாப்பாட்டுக்குக் கூட வழியற்ற ஏழைகளையும், பல்லாயிரக்கணக்கான அனாதைகளையும் உருவாக்கியுள்ளது. மேலும் பல்லாயிரக்கணக்கானவர்களை உடலாலும், உள்ளத்தாலும் ஊனம் உற்றவர்களாக மாற்றி அமைத்தது. இப்பேர்ப்பட்டவர்களுக்கு செய்ய வேண்டிய பேருதவிகள் ஏராளம். அவைகளில் ஒரு கணிசமான உதவியை அறவழிப்போராட்ட குழு செய்துகொண்டிருப்பதை என் கண்களால் பார்க்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. நான் அழைக்கப்பட்ட அன்றைய தினம் கணவன்களால் கைவிடப்பட்ட மனைவிகள், பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்கள், யுத்தத்தின் விளைவால் குடும்பத்தை இழந்தவர்கள் என பல நூற்றுக்கணக்கானோருக்கு மதிய உணவும், படுப்பதற்கான பாய், போர்வை, மற்றும் சாறம், சவர்காரம் உட்பட பலபொருட்கள் வழங்கப்பட்டது மட்டுமன்றி அவர்கள் வாழ்வதற்கான நம்பிக்கையும் அங்கு ஊட்டப்பட்டது.

புதிய வடிவில் புனரமைக்கப்பட்ட இவ் நிறுவனம் கண்டி பிரதான வீதியில் கைதடி நுணாவில் கிராமத்தில் கம்பீரமாக காட்சி தருகிறது. பலர் வந்து தங்கி இளைப்பாறும் வசதியான முற்றம், பெரிய ளவிலான நூல் நிலையம், மற்றும் சிறிய கைத்தொழில் பேட்டை என்பன அமைக்கப் பட்டிருந்ததை நான் சுற்றிப் பார்வையிட்டேன். இத்தனை ஏற்பாடுகளையும் முன்னின்று நடத்திக்கொண்டிருந்தவர் அண்ணன் ஜீவா அவர்கள்.

அண்ணன் ஜீவா அவர்களுக்கு உடலியல் ரீதியாக பல நோய்கள் இருந்தபோதும் அதை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் 24 மணிநேரமும் அந்த ஏழை, விழிம்புநிலை மக்களின் வாழ்வு பற்றிய சிந்தனையும், செயற்பாடுமே அவரது மூச்சாக இருந்தது. எழுந்து நடக்கமுடியாத சூழலிலும் கூட மக்கள் பிரச்சனைகள் படும் இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிடுவார். இதனால் இவரது உடல்நிலை பற்றி அவரது குடும்பத்தினர் மிகவும் வேதனைப்பட்ட சம்பவங்களும் உண்டு.

விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தை தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்த காலத்தில் அறவழிப் போராட்ட குழு நிர்வாகத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர். இம்முயற்சிக்கு மிகப்பெரும் எதிர்ப்புக்காட்டியவர் அண்ணன் ஜீவா. விழிம்பு நிலை சார்ந்து இயங்கும் சமூகசேவை இயக்கம் விடுதலைப் புலிகள் கட்டுப் பாட்டிலோ அல்லது அரசசார்பு கட்டுப்பாட்டிலோ இயங்காமல் சுதந்திரமாக செயற்பட வேண்டும் என்பதே அவரின் குறிக்கோளாக இருந்தது. இருப்பினும் விடுதலைப்புலிகளை எதிர்கொள்ளும் சக்தியற்ற அண்ணன் ஜீவா சிறிதுகாலம் தனது செயலாளர் பொறுப்பில் இருந்து விலகியே இருந்துள்ளார். ஆனாலும் ஏழை, விழிம்புநிலை மக்கள் இவர்மேல் கொண்டுள்ள பற்றின் காரணமாக மீண்டும் இவ்வியக்கத்தில் முக்கிய செயற்பாட்டாளராக தொடர்ந்து செயலாற்றினார். மக்கள் மீது உள்ள உண்மையான பற்றும், திட்டமிட்டு செயற்படும் திறமையுமே இவர் தொடர்ந்து நற்பெயருடன் செயற்படுவதற்கு காரணமாக அமைந்தது.

ஒரு பட்டாசு வெடிச்சத்தத்திற்கே அச்சப்பட்டு ஏஜென்சியைப் பிடித்து, ரிக்கட் போட்டு நாட்டை விட்டு ஓடும் எம்மக்கள் மத்தியில் அண்ணன் ஜீவகதாஸ் போன்றோர், இறுதிவரை அந்த மண்ணில் வாழ்ந்து, மக்களுக்காக செயற்பட்டமையானது, வர லாற்றில் என்றுமே மறந்துவிட முடியாத மாமனிதர்கள் வரிசையில் அவரது பெயரையும் நிலைத்தி ருக்கச் செய்திருக்கின்றது.

இம்மக்களுக்காக இறுதிவரை வாழ்ந்த அண்ணன் ஜீவகதாஸ் அவர்களை தலித்மக்கள் சார்பில் வாழ்த்தி வணங்குவதில் பெருமைப்படுகிறேன்.

**அ.தேவதாசன்- தலைவர்**
**இலங்கை தலித் சமூகமேம்பாட்டு முன்னணி (பிரான்ஸ்)**

www.padippakam.com

# வழிகாட்டி ஜீவா அண்ணா

ஜீவா அண்ணரின் பிரிவு எமது குடும்ப உறுப்பினர் ஒருவரின் இழப்பை போன்ற துயரத்தையும் தவிப்பையும் என்னுள் ஏற்படுத்தியிருக்கின்றது. அந்த துயரச் செய்தி என் காதுகளுக்கு கிடைத்த மறுகணத்தில் அனைத்து உணர்வுகளும் ஸ்தம்பித்து போய்விட்டன. நாம் எங்கு வாழ்ந்தாலும் ஜீவா அண்ணரின் பாதிப்பு, தாக்கம் இல்லாமல் வாழ முடியாது. அவர் நல்ல விடயங்களை உயர்பண்புகளை எமக்கு கற்பித்து இருக்கின்றார். அவர் நேரடியாகவும் மறைமுகமாகவும் எம்மோடு இணைந்திருக்கின்றார். அவர் கற்றுத் தந்தவற்றை விட அவரைப் பார்த்துப் பழகிய விடயங்கள் அதிகமாக இருக்கின்றன.

ஜீவா அண்ணன் எங்களுக்கு மூத்த சகோதரனாக , தந்தையாக, குருவாக, வழிகாட்டியாக, ஆலோசகராகவே அவரைக் கணிப்பிடமுடியும். இன்றும் கூட எந்த விவகாரமாக இருந்தாலும் ஜீவா அண்ணர் இதில் எந்த முடிவு எடுப்பார் என்பதனை கணித்துத் தான் முடிவுகளை எடுப்பேன். அதனால் எந்தப் பிரச்னையும் இல்லை. நான் எனது நாட்டை விட்டு வந்து கனடாவில் திருமணம் முடித்து இன்று பிள்ளைகள் கணவருடன் வாழ்ந்து வருகின்றேன். ஆனாலும் அறவழி பணிமனையில் நான் செயற்பட்ட காலத்தையும் ஜீவா அண்ணரையும் அறவழி நண்பர்களையும் மறக்கவில்லை.

எனது தாய்நாட்டிற்கு சென்றபோது எங்கள் ஊர் குடும்பத்தினர் உறவினர்களை மட்டுமல்ல ஜீவா அண்ணரையும் அறவழிப் பணிமனையையும் தரிசித்துவிட்டுத் தான் திரும்பினேன்.

1980 களில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் அலுவலக கட்டிடத்தின் அருகில் அறவழிப் போராட்டக் குழு இயங்கிய காலத்தில் கடிதங்களை தட்டச்சு செய்வதற்கு ஜீவா அண்ணருக்கு உதவியாக செயற்பட்டது தான் அறவழிப் போராட்டக் குழுவுடனான முதலாவது தொடர்பாக எனக்கு இருந்தது.பின்னர் எமது கிராமத்தில் அறவழி போராட்டக் குழுவுடனான முதலாவது தொடர்பாக எனக்கு இருந்தது. பின்னர் எமது கிராமத்தில் அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் ஆசிரியராக நியமிக்கப்பட்டு 1988 இல் நடைபெற்ற பாலர் பாசாலை ஆசிரியைகளுக்கான முதலாவது பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டேன்.இதன் பின்னர் அறவழியின் பாலர் பாடசாலைகளின் திட்டப் பொறுப்பாளராக நியமனம் பெற்று அதன் அலுவலகத்தில் முழுநேர ஊழியராக செயற்பட்டேன். தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி பிரதேசங்களில் 67 பாலர் பாடசாலைகள் அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்பட்டன. அந்தப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், மாதாந்த சந்திப்புக்கள், விளையாட்டுப் போட்டிகள், கலை கலாச்சார நிகழ்வுகள் என பாடசாலை நிர்வாக செயற்பாடுகளுடன் பாடசாலை பெற்றார்களுக்கான சந்திப்புக்கள் போன்ற அனைத்து விவகாரங்களையும் வழி நடத்துவது என பல பொறுப்புக்கள் இதன் திட்டப் பொறுப்பாளர் என்ற வகையில் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன. அறவழி பணிமனைக்குள் காலடி எடுத்து வைக்கும்போது எந்த விடயமும் எனக்குத் தெரியாது. ஆனால் அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் மிகவும் பவ்வியமாக எனக்கு புரியவைத்து செயற்பட வைத்தவர் எமது ஜீவா அண்ணா.

.பாலர் பாடசாலை ஊடாக அடையாளம் கண்டு கொண்ட கிராமங்களில் மாணவர் புலமைப் பரிசில் திட்டம், பெண்களுக்கான உதவித்திட்டம், சுயதொழில் உதவித்திட்டம் என பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அவற்றை சுலபமாக செயற்படச் செய்யும் அளவுக்கு அறிவும் அனுபவமும் ஜீவா அண்ணரிடமிருந்து கற்றுக் கொண்ட பாடங்கள்.

அறவழி என்னும் பள்ளியில் கற்றுக்கொண்ட பாடங்கள் எனது குடும்பத்தையும் வழி நடத்தப் போதுமானதாக இருப்பதை நான் உணர்ந்திருக்கின்றேன். இவையனைத்திற்கும் ஜீவா அண்ணருக்குத் தான் நன்றி கூறவேண்டும்.

\- **திருமதி கேதீஸ்வரி சிவசுப்பிரமணியம்- கனடா**

# சர்வதேச தொடர்பாளர்

எங்கள் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய அமரர் திரு.ஜீவகதாஸ் அவர்கள் மட்டுவில் சாவகச்சேரியைச் சேர்ந்தவர். இவர் கல்வியை பூர்த்தி செய்து கொண்டு பொதுப்பணியில் தன்னை இணைத்துக் கொண்டார். எமது பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வ.ந. நவரத்தினம் ஐயா அவர்களுடன் இணைந்து செயற்பட்டார். இவரின் சேவையால் பலராலும் கவரப்பட்டார். இதன் காரணமாக மறவன்புலவு திரு.சச்சிதானந்தம் அவர்களின் தொடர்பு ஏற்பட்டது.

அக்காலப்பகுதியில் எமது சமுதாயத்தில் பலவிதமான ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு மோதல் அணுகுமுறையாய் பல விப ரீதங்கள் நடந்து கொண்டிருந்தன.இவற்றை சமாதான வழியில் அணுகுவதற்கும் சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கோடு சச்சிதானந்தம் ஐயா அவர்களின் சிந்தனையில் அறவழியில் அணுகி அமைப்பு
ரீதியாக செயற்படுவதற்கு ஒரு திறவுகோலாக போராட்டக் குழு ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது திறமை, ஆற்றல், மொழித்திறன் நேர்மையால் தன்னை முதன்மைப்படுத்திய அமரர் .ஜீவகதாஸ் அவர்கள் எல்லோரின் ஆதரவோடும் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இக்குழுவின் தலைவர்களாக பேராசிரியர் நேசையா அவர்கள் , திரு.வி.சு.துரைராஜா, திரு. தங்கவேலு ஆகியோரும் தற்போது ஆசிரியர் திரு.சக்திவேல் அவர்களும் செயற்பட்டு வருகிறார்.

இக்குழுவின் மூலம் ஆரம்ப கால கட்டத்தில் கிராம மட்டத்தில் ஏற்படும் சமூக ஏற்றத்தாழ்வுகள், ஆலய சம வழிபாடு, சீதனஒழிப்பு, அறவழி சிந்தனைகள் இக்குழு மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பின்னர் சமுதாய புரட்சிக்கு பாலர் கல்வியிலேயே வித்திடவேண்டும் என எண்ணி நூற்றுக்கணக்கான பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படு



படிப்பகம்

www.padippakam.com

கின்றன. விவசாய வளர்ச்சிக்கு உதவுதல், சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் தொடர்கின்றன.
1983 இல் நாட்டில் ஏற்பட்ட இனமோதலால் பாதிக்கப்பட்டு உதவி தேடி வடக்கு நோக்கி வந்த உதவியற்ற குடும்பங்களுக்கு கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் முகாம் அமைத்து பாதுகாத்து, பராமரித்து பின்னர் மறவன்புலவு, கெற்பலி பகுதியில் காணி கொள்வனவு செய்து அரச, தனியார் நிறுவன உதவியுடன் வீடு, கிணறு, மலசலகூடம், ஏனைய பொது வசதிகள் ஏற்படுத்தப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டது. இச்செயற்பாட்டிற்கு அறவழிப் போராட்டக் குழுவுடன் தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் செயலாளராகவும் திரு. ஜீவகதாஸ் அவர்கள் செயற்பட்டார்.
ஜீவா அவர்களுக்கு பல அரச பதவிகள் தேடி வந்தன. அவற்றை எல்லாம் ஏற்காமல் அறவழிப் போராட்டக் குழு மூலம் செயற்பட்டு சேவை செய்ய திட்டமிட்டுச் செயற்பட்டார்.இரவு, பகல் பாராது செயற்பட்ட இவருக்கு யுத்த சூழ்நிலை, இடப்பெயர்வுகள்,இழப்புக்களால் பாதிக்கப்பட்டபோது மனம் தளராது பல சவால்களுக்கு முகம் கொடுத்து இலட்சிய உறுதியோடு தனிமனிதராக செயற்பட்டார்.
பாலர் பாடசாலை அமைத்தல், ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு, விவசாய உதவி, சுயதொழில் முயற்சிகள், விதவைகள், அநாதைகள் இன்னும் பல நிர்வாக செயற்பாடுகளுக்கு பணம் தேவைப்பட்டது. திரு. சச்சிதானந்தம் அவர்களின் வழிகாட்டலில் சர்வதேச தொண்டர் நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்த தொடர்புகள் எல்லாம் ஜீவா அண்ணா அவர்களாலேயே பேணப்பட்டது.
பின்னர் குழு தனியாகவும் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற இணையங்களுடன் இணைந்து செயலாற்றினார்.
நான் 1980, 1983 காலப்பகுதிகளில் அறவழியில் தொண்டனாகச் செயற்பட்டு பின்னர் நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்து செயற்பட்டதுடன் குழுவின் செயற்பாடுகள் தமிழ் பகுதியெங்கும் விஸ்தரிக்கப்பட்டது.
இவரின் சேவை வளர்ச்சிக்கு இவரின் மனைவி, பிள்ளைகள் உறுதுணையாக இருந்தனர்.
எல்லோரிடமும் சிரித்து, அன்பாகப் பழகும் திரு.க.ஜீவகதாஸ் அவர்கள் இன்று எம்முடன் இல்லை.
தென்மராட்சியிலிருந்து சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட்ட சர்வதேசத் தொடர்பாளரின் இழப்பு சோகம் நிறைந்த ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

**-அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் சகோதரன் சு. தங்கமயிலோன்**
**(முன்னாள் கிராமசபை உறுப்பினர் - கொடிகாமம்)(அறவழிப் போராட்டக் குழு நிர்வாக உறுப்பினர்)**

# என் நினைவுகளில் ஜீவா அண்ணன்!

அமைதியான முகம். அதிகம் அலட்டிக்கொள்ளாத சுபாவம். செயலாற்றல் மிக்க தீரம். அழகான கையெழுத்து.. என ஜீவா அண்ணனைப் பற்றி எழுதிக் கொண்டே போகலாம்,அறவழிப் போராட்டக்குழு செயலாளராக இவர் கடமையாற்றிக்கொண்டாலும் அறவழி என்றால் ஜீவா அண்ணன் தான் என்னுமளவிற்கு இரண்டும் ஒன்றாய் அமைந்தது குறிப்பிடத்தக்கது.
அறவழி நிறுவனமும் அதனைக் களமாகக் கொண்ட ஜீவா அண்ணனும் செய்தவை அனைத்துமே சாதனை என்றுதான் சொல்லவேண்டும்.
கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு முன்னர் அறவழியால் நடத்தப்பட்ட எழுத்தாளர் பயிற்சிப பட்டறையில் நான் கலந்துகொண்டிருக்கின்றேன்.
மிக ஒழுங்காக நிகழ்ச்சி நிரல்களை அமைத்துவிட்டு அதற்கென ஒவ்வொரு பொறுப்பாளர்களை நியமித்து விட்டு அமைதியாக இருக்கும் ஜீவாஅண்ணனின் நிர்வாகத்திறன் அளவிடமுடியாதது.
கலாநிதி மௌனகுரு திசைகள் பத்திரிகையாளர் யேசுராசா எழுத்தாளர் சாந்தன் நாடகத்துறையைச் சேர்ந்த சிறீகணேசன் என மிகப் பெரிய பிரபலங்களையெல்லாம் சந்திப்பதற்கும் அவர்களது ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களுடன் கலந்துரையாடவும் கிடைத்த அந்த வாய்ப்பு ஜீவா அண்ணனால் கிடைத்தது என்பது உண்மை.
என் வாழ்வில் கடந்துபோன பக்கங்களில் மிகப் பெறுமதியான நாட்கள் அவை என்பதை கூறித்தானாக வேண்டும்.இன்று நினைத்தாலும் ஆச்சரியப படவைக்கின்ற இப் பட்டறை நிகழ்வுகளை அறவழியாலும் ஜீவா அண்ணனாலுமே தரமுடியும்.
இப் பட்டறை முடிந்தவுடன் பெண்கள் அமைப்பு ஒன்றினால் நடத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் எனது பள்ளி எழுந்திடுவீரே என்ற கதை முதற்பரிசைப் பெற்றுக்கொண்டது, அச் சிறுகதை வெளிவந்த வுடனேயே அதனை வாசித்துவிட்டு வாழ்த்துக் கடிதம் ஒன்றை ஜீவா அண்ணன் எழுதியிருந்தார். அறவழி முகவரியுடன் ஜீவகதாஸ் எனக் கையெழுத்திட்ட அந்த வாழ்த்துக் கடிதத்தை எனக்குக் கிடைத்த முதல் வாழ்த்துக்கடிதம் என்பதால் பொக்கிசமாகவே பேணி வந்திருக்கின்றேன்.
ஜீவாஅண்ணனுக்கிருந்த மற்றொரு திறமை அவரது ஆங்கில அறிவாகும். இந்த ஆங்கிலமொழிப் புலமையே அறவழி நிறுவனத்தை நிர்வகிக்கும் மிகப்பெரிய பணியை அவர் பெற்றுக்கொள்வதற்கு அடிப்படையாக இருந்திருக்குமென எண்ணுகின்றேன். இந்த ஆங்கில மொழியறிவாலேயே அவர் பல வெளிநாட்டுப்பயணங்களையும் மேற்கொண்டிருந்தார்.
மனித வாழ்வில் பிறப்பும் இறப்பும் எல்லோருக்கும் பொதுவானது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட எம் வாழ்க்கைக் காலத்தை நாம் அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளவேண்டும். இறந்தபிறகும் மற்றவர்களால் பேசப்படுமளவிற்கு நாம் வாழ்ந்தாக வேண்டும். ஜீவா அண்ணன் தன் வாழ்வை அர்த்தமுள்ள தாக்கியிருக கிறார். அவருடைய சேவையைப் போற்றிப் பேசுமளவிற்கு க் கிராமங்கள் தோறும் அவர் ஆற்றிய பணிகள் சிறுவர் பாடசாலைகளாகவும் விவசாயப் பணிகளாகவும் சமூக சேவைகளாகவும் பரவிக் கிடக்கின்றனஅவரது இழப்பு அவர் சார்ந்த சமூகத்திற்கு பேரிழப்பேயாகும். சமூகம் மட்டுமல்ல அவரது குடும்பத்தினருக்கும்கூட அவரது இழப்பு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். அவரையே துணையென வாழ்ந்த மனைவி அருமை மகன் அன்பான சகோதரி என தன்னோடு வாழ்ந்த அத்தனை உறவுகளையும் தவிக்க விட்டுவிட்டு தனியாகப்போன ஜீவா அண்ணனது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டு கின்றேன்.

**திருமதி வேணி கிருபாகரன் - ஜேர்மனி**



படிப்பகம்

www.padippakam.com

# செயற்திறன் மிக்க செயலாளர்

அறவழிப் போராட்டக் குழு 1979 மாசி 25 ஆம் திகதி மறவன்புலவு திரு.க. சச்சிதானந்தம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

இதன் தலைவராக திரு.வி.சு. துரைராஜா அண்ணாவும் செயலாளராக திரு. க.ஜீவகதாஸ் அண்ணாவும் தெரிவு செய்யப்பட்டதுடன் பொருளாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அன்று தொடக்கம் இன்று வரையும் தான் ஏற்றுக்கொண்ட பணியில் இம்மியளவும் விலகாது தொடர்ந்து செயற்பட்டவர் அமரர் ஜீவா அண்ணா.

1979 மாசி 23,24,25 ஆம் திகதிகளில் மூன்று நாட்கள் கைதடியில் நடத்தப்பட்;ட அறவழி பயிற்சியினை தொடர்ந்து இந்த நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.அறவழி அகிம்சை வழி எண்ணம் சார்ந்த பல தொண்டர்கள் இதில் கலந்து கொண்டனர். இதில் நானும் ஒரு தொண்டராக கலந்து கொண்டு அறவழி பயற்சி முடித்து சத்தியப்பிரமாணமும் செய்து கொண்டேன்.

அறவழிப் போராட்டக் குழுவின் ஆரம்ப கால இயக்குநர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்ட நான் அறவழி தொடர்பான வேலைத்திட்டங்களில் ஜீவா அண்ணாவுடன் இணைந்து பணியாற்றியிருக்கின்றேன். அப்பொழுதெல்லாம் ஜீவா அண்ணாவின் நிர்வாக திறனை நேரில் பார்த்து வியப்படைந்திருக்கின்றேன். 1991 இல் அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்பட்ட பாலர் பாடசாலைகளின் மேற்பார் வையாளராக பணிக்கமர்த்தப்பட்டு 1992 இல் திட்ட இணைப்பாளராக நியமனம் பெற்றேன். தொடர்ந்து 1993 இல் நிர்வாக உதவியாளராகவும் ஜீவா அண் ணாவினால் நியமிக்கப்பட்டேன். இந்தப் பதவிகளின் மூலம் எனக்கு அருகில் இருந்து ஊக்குவித்து வந்தவர் ஜீவா அண்ணா. அவரின் சகோதரத்துவம், மனிதநேயம் போன்றவை பாராட்டத்தக்கவையாகும்.

ஜீவா அண்ணனின் ஆளுமையின் கீழ் அவரின் வழி நடத்தலில் கற்றுக்கொண்ட பல விடயங்கள் 1995 இல் நிர்வாக பொறுப்பாளராக பணியாற்றக் கூடிய தகுதியை எனக்கு ஏற்படுத்தியது.

1983 ஆம் ஆண்டு ஜுலைக் கலவரத்தில் பாதிக் கப்பட்ட மக்களுக்காக கைதடியில் ஆரம்பிக்கப்பட்ட அகதிமுகாமில் நானும் எனது கணவரும் முழு நேர தொண்டராக செயற்படுகின்ற நிலைக்கு அறவழிப் பணிகள் எம்மை ஈர்த்துக் கொண்டது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற ஜீவா அண்ணாவின் சிந்தனைக்கு வடிவம் கொடுக்கும் வகையில் நாம் செயற்பட்டோம்.

தலைமைத்துவ பண்புகளையும் நிர்வாக செயற்திறன்களையும் அறவழியில் பணியாற்றிய காலத்தில் கற்றுக்கொள்வதற்கு ஜீவா அண்ணரின் உதவி பெரிய பலமாக இருந்தது.

நான் அறவழியில் கடமையாற்றிய காலம் யுத்த நெருக்கடிகள் அதிகரித்த காலம். அந்த நாட்களில் இடம் பெற்ற தாக்குதல்களாலும், இடப்பெயர்வுகளினால் துன்பப்பட்ட போதும் பல சவால்களை எதிர்கொண்டபோதும் ஆபத்துக்கள் நிறைந்த வேளையில் உயிரைப் பணயம் வைத்து ஏனைய தொண்டர்களுடன் இணைந்து அறவழிப் பணிகளை செய்து வந்தேன். ஜீவா அண்ணரின் வழிகாட்டலால் இத்தகைய இடர்க்காலத்தில் நெஞ்சுரம் கொண்டு மக்கள் மேம்பாட்டுப் பணிகளை ஆற்றி வந்தோம்.



இடப்பெயர்வினால் மக்களுக்கு உணவு, உடை மற்றும் தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக் கொடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டோம்.

யுத்த நெருக்கடி வேளைகளிலம் பணிமனை தொண்டர்கள் சந்திப்பு மற்றும் கலந்துரையாடல்களை ஜீவா அண்ணா நடத்திவைப்பார். ஒவ்வொரு நாள் காலையிலும் மூச்சுப்பயிற்சிகளை தொண்டர்களுக்கு வழங்கி உற்சாகப்படுத்துவார்.

அன்பு, அகிம்சை, எளிமை என்ற தாரக மந்திரங் களுடன் செயற்பட்டு வரும் அறவழிப் போராட்டக் குழுவிற்கு தேசிய, சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஐ.நா. நிறுவனங்களின் ஆதரவும் உதவிகளும் மற்றும் நலன் விரும்பிகள், நன்கொடை யாளர்களின் ஒத்துழைப்புக்களும் அவ்வப்போது கிடைத்து வருவதினால் உள்நாட்டிலேயே மிகச் சிறந்த அரச சார்பற்ற நிறுவனமாக அறவழிப் போராட்டக் குழு மிளிர்கிறது. இதற்கு காரணமாக இருந்தவர் எங்கள் ஜீவா அண்ணா.

அறவழிப் போராட்டக் குழுவின் நீண்ட பயணத்தி;ற்கு திருவாளர்கள் வி.சு.துரைராஜா, வி.ஜீ.தங்கவேல், எஸ்.பேரம்பலம், குணசேகரம், க. கோபாலகிருஷ்ணன், எஸ்.அருளானந்தம், க.தங்கமயிலோன், மகாலிங்கம், திருமதி ஈஸ்வரி ஜீவகதாஸ் போன்றவர்களின் அர்ப்பணிப்பான சேவைகளுக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

யுத்தம் ஓய்ந்து ஒரு சமாதான சூழல் நிலவுகின்ற நிலையில் அறவழியின் பணிகளும் ஏராளமாய் காத்திருக்கும் இத்தருணத்தில் எங்கள் அண்ணன் ஜீவகதாஸின் இழப்பு தாங்க முடியாதது.எங்களை வளப்படுத்திய ஜீவா அண்ணரே உங்கள் ஆத்மா சாந்தியடைக.

**(ஆரம்ப கால இயக்குநர் அறவழி)**
**திருமதி கனகா தங்கராஜா- (பெல்ஜியம்)**



படிப்பகம்

# சமூக அக்கறை கொண்ட ஊடகவியலாளர்!

தமிழர்களின் வரலாற்றில் பலருக்கும் பல பங்குகள் உண்டு நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் 2000 களின் மறக்க முடியாத பல துயரங்களை மீண்டும் எமது வரலாற்றில் சேர்த்துக் கொண்டுவிட்டோம்.

கடந்கால இதிகாசங்களை படிக்கும் போது அப்போது நான் இருக்கவில்லையே அல்லது தற்போதைய போன்ற அறிவுபடைத்தவர்கள் அப்போது இல்லை என்று எமது வரலாற்றை நாமே படித்து வருத்தப்பட்டதுண்டு. அதன் தொடர்கதையாகத்தான் 2000 களின் காலப்பகுதியும் கடந்து செல்கின்றது.

தமிழ் வரலாற்று பதிவாளர்களை இழந்த அதிகமாக இழந்து கொண்டிருக்கும் காலப்பகுதியும் இது தான். அந்த வழியில் தமிழீழ வரலாற்று காலப் பகுதியில் பல உண்மைகளை அறிந்திருந்த அனுபவம்வாய்ந்த உன்னதமான ஒரு பத்திரிகையாளனை மீண்டும் நாம் இழந்துவிட்டோம்.

வீரகேசரி பத்திரிகையின் நீண்ட கால செய்தியாளரும் சமூகசேவையாளருமான எமது ஜீவகதாஸ் அவர்களின் திடீரமறைவு மனதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத தியுள்ளது.

அறவழி போராட்ட குழு செயலாளரான இவர் அரசியல் ஈடுபாடுகொண்டவராகவும் ஆரம்ப காலங் களில் செயற்பட்டிருந்தார்.

இரக்க சுபாவத்தை இயல்பாக கொண்டிருந்த காரணத்தாலோ என்னவோ பத்திரிகை துறையில் பாதிப்படைந்துள்ள மக்களின் நலன்களில் அக்கறையுள்ளவராக அது தொடர்பான செய்திகளுக்கு முன்னுரிமை அளிப்பவராக இருந்து வந்துள்ளார்.

வீரகேசரியின் மதிப்புக்குரிய ஒரு பத்திரிகையாளராக கருதப்பட்டார். 'ஜீவாண்ண' என்று சகலராலும் அழைக் கப்படுமளவிற்கு அவரது நற்குணம் அமைந்திருந்தது.

யாழிலுள்ள ஒருசில ஊடகவியலாளர்கள் பல ஊடகங்களிலும் தாம் முன்னனி வகிக்கவேண்டும் என்ற பேராசையுடன் சக ஊடகவியலாளரின் முதுகில் ஏறிநின்று சவாரி செய்த கால கட்டத்தில், ' எமக்குரிய தளத்தில் விசுவாசமாகவும் உறுதியாகவும் செயற்படுவதே பத்திரிகையாளனின் கடமை ' என் போன்ற இளம் ஊடகவியலாளர்களுக்கு அடிக்கடி அவர் சொல்லும் அறிவுரையாகும்.

ஏற்கனவே அரசியலில் இவருக்கிருந்த ஈடுபாடும், இதனால் அரசியல் மட்டத்தில் இவருக்கிருந்த தொடர்புகளையும் பேணுவதற்காக தனது ஊடகத்துறையை ஒரு போதும் பயன்படுத்தியது கிடையாது.

அரசியல் கூட்டங்களுக்கு செல்லுவதற்கு முன்னர் அக்கூட்டங்களில் பேசப்படவுள்ள விடயங்களை முன்கூட்டியே அனுமானித்து அது தொடர்பான விமர்சனங்களை முன்வைப்பதுடன், ஏற்கனவே சம்பந் தப்பட்டு அரசியல் வாதிகளை அறிந்திருப்பதினால் இவர்களிடம் இப்படித் தான் கேள்விகளை கேட்டக வேண்டும் என்ற ஆலோசனைகளையும் முன்வைப்பார்.

அன்னார் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளராக இருந்த கால கட்டத்தில் கூட்டங்களை தவறாது நடாத்துவதுடன் இக்கட்டான வழ்நிலையிலும் கூட்ட ஒழுங்குகள் தொடர்பான கடிதமூலமான அறிவித்தல்களை தனது சொந்த செலவுகளில் செய்தும் வந்தார்.

பிற்காலங்களில் பத்திரிகைத்துறையை துஷ்பியோகம் செய்ய முயற்சித்தவர்களை நேரில் கண்டித்து வந்தார். இதனால் 'ஆத்ம திருப்திக்காக பத்திரிகைத்துறையை தக்கவைத்திருக்கின்றோம்' என்ற கருத்தை அடியோடு மறுத்த இவர் ஆயுத, அரசியல் ஆசைகள் அதிகமாக மேலோங்கியிருப்பதை கண்டு கடும் விசனத்தை அவ்வப்போது தெரிவித்தும் வந்தார், கொல்லப்படுபவர்களின் அல்லது காணாமல் போவோர்களின் எண்ணிக்கையை வெளியிடுவது மட்டுமே செய்தி என்ற நிலை யாழ் குடாநாட்டில் தோன்றிய காலகட்டத்தில் மீண்டும் மக்களுக்கான நேரடி சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்று தனது ஆதங்கங்களை வெளிப்படுத்திவந்தார்.

இதன் காரணமாக வீரகேசரியின் அலுவலக செய்தியாளர் பதவியை துறந்து பிரதேச செய்தியாளராக மீண்டும் செயற்பட்டதுடன் தனது சமூக சேவைகளை முன்னெடுக்க ஆரம்பித்துவிட்டார்.

நாளொரு பிணம் குடாநாட்டில் விழுந்து கொண் டிருந்த காலகட்டத்தில் தெருவில் யார்கிடந்தாலும் நமக்கென்ன என சாகிறவனுக்கு தண்ணி கொடுத்து சாபத்தை நான் ஏன் வாங்க வேண்டும் என்று விழுந்தவனை தூக்காது சென்ற கால கட்டத்தில் தனது சமூக சேவையில் முழுவீச்சாக ஈடுபட்ட போது இவர் சாவகச்சேரியில் வடிகாலொன்றிற்குள் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு தூக்கியெறியப்ப ட்டிருந்தார். வீதியால் சென்ற ஒருவர் இவரை கண்டும் காணாதது போல் சென்றிருந்தார் எனினும் ஜீவாண்ணண்ணின் ஸ்கூட்டர் வண்டியை அடையாளம் கண்ட அந்நபர் ஒருதடவை எட்டிப பார்த்த போது இருதய நோயினால் கஷ்டப்படுவதை கண்டு அருகிலிருந்தவர்களை அழைத்து வைத்திய சாலையில் அனுமதித்திருந்தனர்.

இவரின் நற்குணத்திற்கு சான்றாக இச்சம்பவத்தை என்னால் மறக்கமுடியவில்லை.

மீண்டும் ஆறுவருடங்களில் அவர் தன் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை சிறப்புற நிறை வேற்றினார்.

எப்படி மறப்பது எமது ஜீவா அண்ணனை.

**-வின்சன்ற் ஜெயன்**
**சுவிஸ்**

www.padippakam.com





*அறவழிப் போராட்டக் குழுவின் செயலாளராக பணியாற்றிய அமரர் ஜீவகதாஸின் மக்கள் பணி பாராட்டப்படவேண்டியதும் தொடரப்படவேண்டியதுமாகும். போர்ச் வழல் அற்றுப்போனதாகக் கருதப்பட்டாலும் அதனால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் மறைந்துவிடவில்லை. இந்தச் வழலில் தான் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் பணிகள் தாயகத்தில் நிறைய இருக்கின்றன. இந்த இக்கட்டான வேளையில் சிறந்த செயற்பாட்டாளர் ஜீவகதாசை இழந்து நிற்கின்றோம்.*

*எமது நலன்புரிச் சங்கம் தாயகமக்களுக்கு அறவழிப் போராட்டக் குழுவின் ஊடாக உதவிகளை வழங்குவதற்கு பாலமாகவும் தொடர்பாளராகவும் அமரர் ஜீவகதாஸ் செயற்பட்டமையை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.*

*அவரது மறைவிற்கு எமது அஞ்சலிகள்*

**கார்ஜ் நலன்புரிச் சங்கம் - பிரான்ஸ்**



# நன்றிகள்

**அறவழிப் போராட்டக் குழுவின் செயலாளர் அமரர் க.ஜீவகதாஸ் நினைவாக நடத்தப்பட்ட 'அறவழி ஜீவன் நினைவேந்தல் நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.**

**- அறவழி நண்பர்கள் பிரான்ஸ்**




படிப்பகம்

www.padippakam.com



Award presentation ceremony at Sarvodaya Head Quarters in Moratuwa.
UNICEF Chief presented Award to NVDAG Secretary.



Opening of exhibition at the Kaithady Sidda Medical Faculty
Dr.P. Phillips lights the oil lamp.



படிப்பகம்